**TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN**
19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறைத் தீர்ப்பாளர்**

மேல்முறையீட்டு மனு எண். 42 / 2012

திரு.சேலம் மாவட்ட உபயோகிப்பாளர் உரிமைக் கழகம்,
எண்.51, எடப்பாடி சாலை,
தேவூர் – 637 104,
சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம். ... மனுதாரர்
(திரு. சி.ஜி. இளமுருகன்,
தலைவர்/ சேலம் மாவட்ட
உபயோகிப்பாளர் உரிமைக் கழகம்)

எதிர்

மேற்பார்வைப் பொறியாளர்
மேட்டூர் மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
மேட்டூர் அணை – 1. ... எதிர்மனுதாரர்
(திரு. எம். செல்வம், உதவி செயற்
பொறியாளர்/ம.தொ.அ & வளர்ச்சி/
மேட்டூர் )

<u>கேட்புரை நாள் : 16–11–2012</u>

<u>ஆணை நாள் : 31–01–2013</u>

சேலம் மாவட்ட உபயோகிப்பாளர் உரிமைக் கழகத்தின் 1–10–2012 நாளிட்ட மனுவானது மேல்முறையீட்டு மனு எண். 42 / 2012 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கூறிய மேல்முறையீட்டு மனுவின் மீது 16–11–2012 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனு, எதிர்மனுதாரரின் பதிலுரை மேல்முறையீட்டாளரின் எழுத்துவடிவிலான வாதுரை, கேட்புரை நாளில் இரு தரப்பினராலும்

எடுத்துரைக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது : –

**ஆணை**

**1. மேல் முறையீட்டாளரின் கோரிக்கை :**

பாதிக்கப்பட்டுள்ள விவசாயி திரு. இடும்பன் அவர்களுக்கு சுயநிதி திட்டத்தின் கீழ் மின்னிணைப்பு வழங்குவதை தவறுதலாக நிறுத்திவைக்கப்பட்டதை பரிசீலனை செய்து சுயநிதி திட்டத்தின் கீழ் அவருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட முன்னுரிமை தேதி மாறாமல் மின்னிணைப்பு வழங்குவதற்கு உரிய உத்தரவினை மேட்டூர் மின்கோட்ட செயற்பொறியாளருக்கு வழங்க வேண்டியுள்ளார்.

**2. காலதாமதத்திற்கு மன்னிப்பு :**

2.1 இந்த மேல் முறையீட்டாளரின் மனுவின் மீது மேட்டூர் மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்ப்பை 22–3–2012 அன்று வழங்கியது. எனவே மேல்முறையீடு 21–4–2012க்கு முன்பு மின்குறைதீர்ப்பாளரிடன் தாக்கல் செய்திருக்கப்படவேண்டும். ஆனால் மேல்முறையீடு 5–10–2012 அன்று அதாவது 167 நாட்கள் தாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2 மேல்முறையீட்டாளர், தாமதத்திற்கு காரணமாக கூறுவது யாதெனில் அவரின் மனுவின் மீது இறுதி முடிவு எதுவும் பெறப்படவில்லை என்பதால், இதை சிறப்பினமாக கருதி காலதாமதத்திற்கு மன்னிப்பு வழங்கி மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2.3 மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய ஆணையில் கீழ்கண்டவாறு கூறியுள்ளது.

2.4 *“மனுதாரர் தலைவர், சேலம் மாவட்ட உபயோகிப்பாளர் உரிமை கழகம், தேவூர் அவர்களுக்கு தெரிவிக்கப்படுவது யாதெனில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்*

*கழகம் சென்னை தலைமையகத்தின் Circular Memo.No.SE/IEMC/C/EE3/AEE2/ AE/D.178/94 (Tech.Br.) 19-5-1994 மூலம் வழங்கப்பட்ட உத்தரவில் தமிழ்நாட்டில் உள்ள ஆறுகளிலிருந்தும் / பிற நீர் ஆதாரங்களிலிருந்தும் **200** மீ தொலைவிற்குள் உள்ள விவசாய கிணறுகளுக்கு சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் / பொதுபணித்துறை அவர்களிடமிருந்து தடையில்லாச்சான்று பெற்ற பிறகே மின் இணைப்பு வழங்க வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து தடையில்லாச் சான்று பெற்ற பின்னரே மின் இணைப்பு வழங்க இயலும் என்பதாலும், இது தொடர்பாக செ.பொ/ பொ.ப.து / நீஆஅ/ மேட்டூர் அணை மற்றும் செ.பொ/ பொ.ப.து./ நீ.ஆ.அ/ சரபங்கா வடிநில கோட்டம் / நாமக்கல் ஆகியோர்களால் வழங்கப்படும் சான்றுகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பதால் இது குறித்து தகுந்த வழிகாட்டுதல் அளிக்குமாறு மேற்பார்வை பொறியாளர் / மேல் காவிரி வடிநிலம் / பொது பணித்துறை / சேலம் அவர்களுக்கு மேற்பார்வை பொறியாளர் / மேமிபவ/ மேட்டூர் அணை அவர்களால் ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டும் இது தொடர்பாக பல நினைவூட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டும் தடையில்லாச் சான்று பெறவேண்டியது குறித்து எந்த ஒரு விபரங்களும் நாளது தேதி வரை மேற்பார்வை பொறியாளர் / மேல் காவிரி வடிநிலம் / பொது பணித்துறை / சேலம் அவர்களிடமிருந்து பெறப்படாத நிலையில் இம் மனுவின் மீது இறுதி முடிவு எடுக்க இயலாத நிலை ஏற்பட்டு உள்ளது. மனுதாரரின் கோரிக்கையின் படி தலைமை பொறியாளர் / நீர் ஆதார அமைப்பு / பொது பணித்துறை / திருச்சி மண்டலம் அவர்களுக்கு இப்பொருள் குறித்து கடிதம் வரையும்படி மேற்பார்வை பொறியாளர் / மேமிபவ / மேட்டூர் அவர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.*

*மேற்பார்வை பொறியாளர் / மேமிபவ / மேட்டூர் அவர்களின் கருத்து மன்றத்தால் ஏகமனதாக ஏற்கப்பட்டு உள்ளதால் தற்போதுள்ள சூழ்நிலையில் விவசாய விண்ணப்பதாரர் திரு. இடும்பன், த/பெ. முத்து கவுண்டர் தனது கிணற்றுக்கு மின் இணைப்பு பெற விரும்பும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் / பொதுப்பணித்துறை / நீஆஅ/ அவர்களிடமிருந்து தடையில்லாச் சான்று பெற்று அளித்து மின் இணைப்பு பெற்றுக் கொள்ளும்படி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.*

*மேலும் மேற்பார்வை பொறியாளர் / மேல் காவிரி வடிநிலம் / பொது பணித்துறை / சேலம் அவர்களிடமிருந்து தடையில்லா சான்று வழங்குவது தொடர்பாக தெளிவுரை பெறப்பட்டால் அந்த விவரங்களை உடனடியாக மனுதாரருக்கு தெரிவிக்கும் படியும், அதன் அடிப்படையிலும், தற்போது நடைமுறையில் உள்ள வாரிய விதிமுறைகளின்*

*அடிப்படையிலும் நடவடிக்கை மேற்கொள்ளும் படியும் மேற்பார்வை பொறியாளர் /மே.மி.ப.வ / மேட்டூர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.''*

2.5 மேற்கண்ட ஆணையில், மேற்பார்வை பொறியாளர் / மேல் காவேரி வடிநிலம் / பொது பணித்துறை / சேலம் அவர்களுக்கு மேற்பார்வை பொறியாளர் / மேட்டூர் மின்பகிர்மான வட்டம் அவர்களால் ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டும், இது தொடர்பாக பல நினைவூட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டும் தடையில்லாச் சான்று பெற வேண்டியது குறித்து எந்த ஒரு விவரங்களும் நாளது தேதி வரை மேற்பார்வை பொறியாளர் / மேல் காவேரி வடிநிலம் / பொ பணித்துறை / சேலம் அவர்களிடமிருந்து பெறப்படாத நிலையில் இம்மனுவின் மீது உறுதிமுடிவு எடுக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, தாமதத்திற்கு காரணம் கூறியுள்ளார்.

2.6 மேலும் மன்ற விதி 8 ன்படி, மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்யாமல் இருந்தமைக்கு போதுமான காரணம் இருந்தது என்று மின் குறைதீர்ப்பாளர் திருப்தியுற்றால் மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட 30 நாட்களுக்கு பிறகும் ஏற்றுக் கொள்ளலாம் என்று உள்ளது.

2.7 எனவே, மேற்கண்ட மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதம் மன்னிக்கப்பட்டு, மேல் முறையீட்டு மனு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

## 3. <u>மேல் முறையீட்டு மனுவின் சுருக்கம் :</u>

திரு. இடும்பன், த/பெ. முத்துக் கவுண்டர் என்பவர், அரசிராமணிபிட் II கிராமம், ச.எண்.472/12 ல் உள்ள திறந்த வெளிக் கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு பெற விண்ணப்பம் பதிவு செய்துள்ளார். விண்ணப்ப பதிவு எண் 321/09 நாள் 19.12.2009 ஆகும். மேற்படி கிணறு சரபங்கா ஆற்று படுகைக்கு அருகில் வருவதால், பொதுபணித்துறையிடமிருந்து தடையில்லா சான்று பெற்று வந்தால் மட்டுமே மின் இணைப்பு வழங்கப்படும் என்று விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. பொதுப்பணிதுறையின் மேட்டூர் அணை கோட்ட செயற்பொறியாளர் இதன் அருகில் உள்ள கிணற்றிற்கு தடையில்லா சான்று எதுவும் தேவையில்லை என்று தெரிவித்து உள்ளதால் சங்ககிரி மின் கோட்டத்தில் சரபங்கா நதியின் அருகில் உள்ள கிணறுகளுக்கு தடையில்லா

சான்று இல்லாமல் மின் இணைப்பு வழங்குவதாகவும் ஆனால் மேட்டூர் மின் கோட்டம் தடையில்லா சான்று கேட்பதாகவும் எனவே தடையில்லா சான்று தேவை இல்லை என்ற வாதத்துடன் திரு. இடும்பன் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க கோரி மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்கு சேலம் மாவட்ட உபயோகிப்பாளர் சங்கங்கத்தினால் மனு செய்யப்பட்டது. அம்மன்றத்தின் தீர்ப்பு 22–3–12 அன்று வழங்கப்பட்டது. மின் நுகர்வோர் மன்றத்தின் தீர்ப்பு, மனுதாரருக்கு திருப்தி அளிக்காததினால், மின் குறை தீர்ப்பாளரிடம் மேல் முறையீடு செய்துள்ளார்.

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவில் உள்ள வாதங்கள்:</u>

மேல் முறையீட்டாளர் தன்னுடைய மேல் முறையீட்டு மனுவில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

1. சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அரசிராமணி பிட் II ஆலச்சம்பாளையம் மாரிக்கவுண்டர் காடு என்ற முகவரியில் வசிக்கும் திரு.இடும்பன், த/பெ. முத்துக் கவுண்டர் என்பவர் அரசிராமணி பிட் II கிராமம் ச.எண்.472/12 ல் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு விவசாய மின் இணைப்பு பெற விண்ணப்பம் பதிவு செய்துள்ளார். விண்ணப்ப பதிவு எண்.321/09 நாள் 19.12.2009 ஆகும். மேற்படி திறந்தவெளி கிணறு இப்பகுதியில் உள்ள சரபங்கா எனும் காட்டாறு (jungle stream) அருகில் உள்ளதால் பொதுப்பணித் துறையிடமிருந்து தடையில்லாச் சான்று பெற்று தந்தால் மட்டுமே மின் இணைப்பு வழங்க இயலும் என மின் வாரியத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மேற்படி சரபங்கா எனப்படும் காட்டாறு மின்வாரியத்தின் மேட்டூர் கோட்டம் மற்றும் சங்ககிரி கோட்டத்தின் வரம்பில் அமைந்துள்ளது. இந்த காட்டாறு அருகில் உள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு பெறுவதற்கு பொதுப்பணித்துறையின் தடையில்லாச் சான்று எதுவும் தேவையில்லை என பொதுப்பணித்துறையின் மேட்டூர் அணைக்கோட்ட செயற்பொறியாளர் தெரிவித்துள்ளர் (கடித நகல் இணைக்கப்பட்டுள்ளது) இதனை

அடிப்படையாகக் கொண்டு சங்ககிரி மின் கோட்டம் சரபங்கா ஓடை அருகில் உள்ள விவசாய கிணறுகளுக்கு மின் இணைப்புகளை மற்ற இனங்களை போல வழங்கி வருகிறது.

3. ஆனால் மேட்டூர் மின் கோட்டம் சரபங்கா காட்டாறு அருகில் உள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு பெறுவதற்கு பொதுப்பணித் துறையிடமிருந்து தடையில்லாச் சான்று பெற்று தந்தால் மட்டுமே மின் இணைப்பு வழங்க முடியும் என தெரிவித்து மனுதாரர் திரு.இடும்பன் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளது.

4. மன்ற ஆணையின்படி எதிர் மனுதாரரின் வாதுரையில் பக்கம் எண்.2 பத்தி 2ல் இது தொடர்பாக பலமுறை பொதுப்பணித்துறை (நீஆஅ) க்கு தெளிவுரை கேட்டு கடிதம் எழுதியும் எவ்விதமான பதிலும் பெறப்படவில்லை எனவும், பக்கம் எண்.3ல் பத்தி 1ல் சரபங்கா ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள விவசாய கிணறுகளுக்கு தடையில்லாச் சான்று தேவையில்லை என பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. பத்தி எண் 1ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் பொதுப்பணித்துறையின் செயற்பொறியாளர் எதன் அடிப்படையில் தடையில்லாச் சான்று தேவையில்லை என பொதுப்பணிதுறையில் தலைமைப் பொறியாளரின் சுற்றறிக்கையை மேற்கோள்காட்டி தெரிவித்துள்ளார்.

5. பக்கம் எண்.3 பத்தி 4ல் குறிப்பிட்டுள்ள சரபங்கா வடிநில கோட்டம் செயற்பொறியாளர் நாமக்கல் அவர்கள் மின்வாரியத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் பொத்தாம் பொதுவாக அரசு உத்திரவுகள் / சுற்றறிக்கைகளை எதையுமே குறிப்பிடாமல் நடப்பிலுள்ள அரசு உத்தரவுகளின்படி தடையில்லாச் சான்று வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

6. மேலும், இது தொடர்பாக மேட்டூர் மின்விநியோக வட்ட மேற்பார்வை பொறியாளர் அவர்கள், பொதுப்பணித்துறையின் திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் (நீஆஅ)

அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் (கடித நகல் இணைக்கப்பட்டுள்ளது) பார்வை எண்.7 ல் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்திலும் சரபங்கா ஆற்றுப்படுகையில் மின் இணைப்பு பெறுவதற்கு தடையில்லாச் சான்று எதுவும் தேவையில்லை என பொதுப்பணித்துறையின் செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார் என மேற்கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. பொதுப்பணித்துளையில் (நீ.ஆ.அ) சேலம் SE அவர்கள் மேட்டூர் மின் விநியோக வட்டம், SE, அவர்களுக்கு அனுப்பியுள்ள 11.5.2012 தேதிய கடிதத்தில் (கடித நகல் இணைக்கப்பட்டுள்ளது) பொதுப்பணித்துறையின் கண்காணிப்பு பொறியாளர் வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் விவசாய மின் இணைப்பு பெறுவது குறித்து நடைமுறையில் உள்ள அரசாணை மற்றும் சுற்றறிக்கையினை குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தில் பத்தி எண்.3 ல் தலைமை பொறியாளர் (பா) சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண் பி2/1260/93 நாள் 7.10.94 ன்படி ஓடை சிறிய ஓடை அருகில் உள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்க தூரம் ஏதும் கணக்கில் கொள்ள வேண்டியதில்லை என தெரிவித்துள்ளார்.

8. மேற்படி சரபங்கா ஆறு என்பது ஒரு காட்டாறு ஆகும். சரபங்கா நதியில் மழை பெய்யும் நேரங்களில் மட்டுமே தண்ணீர் வருகின்றது. சரபங்கா நதியின் குறுக்கே அணை ஏதும் இல்லை. சரபங்கா நதியில் தொடர்ந்து தண்ணீர் செல்வதில்லை. காலம், காலமாக சரபங்கா நதிக்கரையில் உள்ள கிணறுகளுக்கு தடையில்லாச் சான்று எதுவும் கேட்கப்படாமல் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

9. சரபங்கா நதிக்கரையில் உள்ள விவசாய கிணற்றுக்கு பொதுப்பணித்துறையின் தடையில்லாச் சான்று கேட்டு மின் இணைப்பு வழங்குவதை மேட்டூர் மின் கோட்டம் திரு.இடும்பன் அவர்களுக்கு நிறுத்தி வைத்துள்ளதால் இந்த ஏழை விவசாயி மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார். விவசாயம் தொடர்ந்து செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதே காரணத்திற்காக இவரை போன்ற பல விவசாயிகளும் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

5. <u>எதிர் மனுதாரரின் பதிலுரையிள்ள வாதங்கள்:</u>

எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுரையில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

1. சேலம் மாவட்ட உபயோகிப்பாளர் உரிமை கழகம் அவர்களால் 23.1.12 அளிக்கப்பட்ட மனு மின்நுகர்வோர்குறைதீர்க்கும் குழுமத்திடம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விசாரணையின் இறுதி முடிவு மனுதாரருக்கு பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது.

i) மனுதாரர் தலைவர், சேலம் மாவட்ட உபயோகிப்பாளர் உரிமை கழகம், தேவூர் அவர்களுக்கு தெரிவிக்கப்படுவது யாதெனில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சென்னை தலைமையகத்தின் Circular Memo.No.SE/IEMC/C/EE3/AEE2/ AE/D.178/94 (Tech.Br.) 19-5-1994 மூலம் வழங்கப்பட்ட உத்தரவில் தமிழ்நாட்டில் உள்ள ஆறுகளிலிருந்தும் / பிற நீர் ஆதாரங்களிலிருந்தும் 200 மீ தொலைவிற்குள் உள்ள விவசாய கிணறுகளுக்கு சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் / பொதுபணித்துறை அவர்களிடமிருந்து தடையில்லாச்சான்று பெற்ற பிறகே மின் இணைப்பு வழங்க வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து தடையில்லாச் சான்று பெற்ற பின்னரே மின் இணைப்பு வழங்க இயலும் என்பதாலும், இது தொடர்பாக செ.பொ/ பொ.ப.து / நீஆஅ/ மேட்டூர் அணை மற்றும் செ.பொ/ பொ.ப.து./ நீ.ஆ.அ/ சரபங்கா வடிநில கோட்டம் / நாமக்கல் ஆகியோர்களால் வழங்கப்படும் சான்றுகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பதால் இது குறித்து தகுந்த வழிகாட்டுதல் அளிக்குமாறு மேற்பார்வை பொறியாளர் / மேல் காவிரி வடிநிலம் / பொது பணித்துறை / சேலம் அவர்களுக்கு மேற்பார்வை பொறியாளர் / மேமிபவ/ மேட்டூர் அணை அவர்களால் ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டும் இது தொடர்பாக பல நினைவூட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டும் தடையில்லாச் சான்று பெறவேண்டியது குறித்து எந்த ஒரு விபரங்களும் நாளது தேதி வரை மேற்பார்வை பொறியாளர் / மேல் காவிரி வடிநிலம் / பொது பணித்துறை / சேலம் அவர்களிடமிருந்து

பெறப்படாத நிலையில் இம் மனுவின் மீது இறுதி முடிவு எடுக்க இயலாத நிலை ஏற்பட்டு உள்ளது. மனுதாரரின் கோரிக்கையின் படி தலைமை பொறியாளர் / நீர் ஆதார அமைப்பு / பொது பணித்துறை / திருச்சி மண்டலம் அவர்களுக்கு இப்பொருள் குறித்து கடிதம் வரையும்படி மேற்பார்வை பொறியாளர் / மேமிபவ / மேட்டூர் அவர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

ii) மேற்பார்வை பொறியாளர் / மேமிபவ / மேட்டூர் அவர்களின் கருத்து மன்றத்தால் ஏகமனதாக ஏற்கப்பட்டு உள்ளதால் தற்போதுள்ள சூழ்நிலையில் விவசாய விண்ணப்பதாரர் திரு. இடும்பன், த/பெ. முத்து கவுண்டர் தனது கிணற்றுக்கு மின் இணைப்பு பெற விரும்பும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் / பொதுப்பணித்துறை / நீஆஅ/ அவர்களிடமிருந்து தடையில்லாச் சான்று பெற்று அளித்து மின் இணைப்பு பெற்றுக் கொள்ளும்படி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

iii) மேலும் மேற்பார்வை பொறியாளர் / மேல் காவிரி வடிநிலம் / பொது பணித்துறை / சேலம் அவர்களிடமிருந்து தடையில்லா சான்று வழங்குவது தொடர்பாக தெளிவுரை பெறப்பட்டால் அந்த விவரங்களை உடனடியாக மனுதாரருக்கு தெரிவிக்கும் படியும், அதன் அடிப்படையிலும், தற்போது நடைமுறையில் உள்ள வாரிய விதிமுறைகளின் அடிப்படையிலும் நடவடிக்கை மேற்கொள்ளும் படியும் மேற்பார்வை பொறியாளர் /மே.மி.ப.வ / மேட்டூர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

iv) மேலும் இதன் தொடர்ச்சியாக கண்காணிப்பு பொறியாளர்/ பொது பணிதுறை/ நீஆஅ/ சேலம் அவர்களது க.எண்.113 பல/ இவஅ3/2012கோ–505/ நாள் 11.5.2012 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் அக்கடித நகல் மூலம் சேலம் மாவட்ட உபயோகிப்பாளர் உரிமை கழகத்திற்கும் க.எண்.மேபொ/மே/ உசெபொ/வள/இமிபொ/ கோ.சரபங்கா/ எண்937/12 நாள் 19.7.2012 வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

v) சரபங்கா காட்டாறு என்று பொது பணித்துறையால் கூறப்படவில்லை, சரபங்கா ஆறு என்றே கூறப்பட்டுள்ளது. எனவே தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக விதிமுறைகளின் SE/IEMC/C/EE3/AEE2/

AE/D.178/94 (Tech.Br.) 19-5-1994 ன்படி தமிழ்நாட்டில் உள்ள ஆறுகளிலிருந்தும் பிற நீர் ஆதாரங்களிலிருந்தும் 200 மீட்டர் தொலைவில் உள்ள விவசாய கிணறுகளுக்கு சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் / பொதுப்பணித்துறை அவர்களிடமிருந்து தடையில்லா சான்று பெற்ற பின்பே மின் இணைப்பு வழங்க இயலும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த வாரிய விதிமுறைகளின் அடிப்படையில் திரு.இடும்பன் த/பெ.முத்துக்கவுண்டர் என்ற விண்ணப்பதாரருக்கு ச.எண 472/2 ல் உள்ள கிணற்றுக்கு சரபங்கா நதிக்கு 200 மீட்டர் தூரத்தில் உள்ளதால் பொதுப்பணித் துறையிடம் தடையில்லா சான்று பெற்று தரும்படி பிரிவு அலுவலரால் கடிதம் சார்பு செய்யப்பட்டுள்ளது.

vi) மேட்டூர் மின்பகிர்மான வட்டம் சங்ககிரி கோட்டத்தில் தேவூர் பிரிவு காணியாளம்பட்டி கிராமம் ச.எண்.400/சி யில் சரபங்கா ஆற்றின் 200 மீ தூரத்தில் வரும் பெரிய கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வழங்க செயற்பொறியாளர் / பொதுப்பணித்துறை/ மேட்டூர் அணை அவர்களால் 30.7.02 நாளிட்ட கடிதத்தில் செயற்பொறியாளர்/இப/சங்ககிரி அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க தடையில்லாச் சான்று பெற வேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மேட்டூர் மின்பகிர்மான வட்டம் சங்ககிரி கோட்டத்தில் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வந்தது.

vii) மேட்டூர் மின்பகிர்மான வட்டத்தில் மேட்டூர் கோட்டத்திற்கு உட்பட்ட எடப்பாடி வட்டம் சமுத்திரம் கிராமத்தில் ச.எண்291/5ல் உள்ள கிணற்றுக்கு 3.0 Hp மின்பளுவிற்கு மின் இணைப்பு வழங்க செயற்பொறியாளர்/ பொதுப்பணித்துறை/நீர் ஆதார அமைப்பு, சரபங்கா வடிநிலக்கோட்டம் / நாமக்கல் அவர்களால் தடையில்லாச் சான்று திரு. மா.அம்மாசி த/பெ. மாரிமுத்து என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேட்டூர் கோட்டத்தில் திரு. இடும்பன் த/பெ. முத்துக்கவுண்டர் என்ற விண்ணப்பதாரருக்கு ச.எண்.472/2 ல் உள்ள கிணற்றுக்க சரபங்கா நதிக்கு 200 மீட்டர் தூரத்தில் உள்ளதால் பொதுப்பணித் துறையிடம் தடையில்லா சான்று பெற்று தரும்படி பிரிவு அலுவலரால் கடிதம் சார்பு செய்யப்பட்டுள்ளது.

viii) மேலும் சரபங்கா ஆறா அல்லது மேல்முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளதைப்போல் ஓடை / சிறிய ஓடையா என்பதை உறுதி செய்ய

வேண்டியது பொது பணித்துறை மட்டுமே என்பதால் இது தொடர்பாக வழிகாட்டுதல் வழங்கும்படி பல கடிதங்கள் கண்காணிப்பு பொறியாளர் / பொதுப்பணித்துறை/ நீஆஅ / சேலம் அவர்களுக்கு இவ்வலுவலகத்திலிருந்து வரையப்பட்டுள்ளது.

ix) இது தொடர்பாக, மின் நுகர்வோர்குறைதீர்க்கும் மன்ற ஆணையின்படி தலைமைபொறியாளர் / நீஆஅ / பொதுப்பணிதுறை / திருச்சி அவர்களுக்கும் சரபங்கா ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள கிணறுகளுக்கு விவசாய மின் இணைப்பு வழங்க தடையில்லாச் சான்று பெறுவது குறித்து தகுந்த வழிகாட்டுதலை அளிக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

x) மேலும் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் குழுமத்தீர்ப்பின் படி மேட்டூர் மின் பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட அனைத்து கோட்டங்களிலும் ஒரே நடைமுறை மேற்கொள்ளும் பொருட்டு பின்வருமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

xi) மேற்பார்வைப்பொறியாளர் / மேல்காவேரி வடிநிலம் பொதுப்பணித்துறை சேலம் அவர்களிடமிருந்து தெளிவுரை பெறப்படும் வரையிலும், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்களின் மனு எண் (2) ற்கான இறுதி ஆணைக்கு உட்பட்டும் மேட்டூர் மின் பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட அனைத்து கோட்டங்களிலும் ஒரே நடைமுறை மேற்கொள்ளும் பொருட்டு (uniform proceedure) சரபங்கா ஆற்றுப்படுகையில் 200 மீட்டர் தொலைவிற்குள் உள்ள விவசாய கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்க புதிய விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படும் போதும் / ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு விவசாய மின் இணைப்பு வழங்கும் போதும் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் / பொதுப்பணித்துறை அவர்களிடமிருந்து தடையில்லா சான்று பெற்று அதன் அடிப்படையில் வாரிய விதிமுறைகளுக்கு உட்பட்டும் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவு வழங்கப்ட்டுள்ளது.

xii) கண்காணிப்பு பொறியாளர் / பொது.பணி.துறை / நீஆஅ / சேலம் அவர்களது க.எண்.113 பல/இவஅ3/2012கோ–505/ நாள் 11.5.12 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. அரசு ஆணை எண்.1205/பொ.ப.து/நாள் 12.5.1964 மற்றும் அரசு கடித எண் 29267/எஸ்3/பொ.ப.து./28.6.1985 ன் படி தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி மேட்டூர் கால்வாயின் பிரதான வாய்க்காலில் இருந்து 50 மீட்டருக்குள்ளும் பகிர்வு வாய்க்காலில் இருந்து 25 மீட்டருக்குள்ளும் உள்ள பழையகிணறுகளுக்கு அதாவது மேட்டூர் கால்வாய் வெட்டப்படுவதற்கு முன்பே வெட்டப்பட்ட கிணறுகளுக்கு மட்டும் மின் இணைப்பு வழங்க தடையில்லா சான்று வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. அரசு ஆணை எண்.3339/பொ.ப..து/ நாள் 12.12.1962 ன் படி காவேரி ஆற்றின் கரையிலிருந்து 200 மீட்டருக்கும் மேட்டூர் கால்வாய் ஆயக்கட்டு பகுதியிலுள்ள பழைய கிணறுகளுக்கு (மேட்டூர் கால்வாய் வெட்டபடுவதற்கு முன்வு வெட்டப்பட்டுள்ள கிணறுகளுக்கு) மின் இணைப்பு வழங்க தடையில்லா சான்று வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. தலைமை பொறியாளர் (பா) சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.பி2/1260/93 நாள் 7.10.1994 ன் படி ஆயக்கட்டு இல்லாத பகுதிகளில் வரும் கிணறுகளுக்கு ஆற்றிலிருந்து 200 மீட்டருக்கு மேல் இருந்தால் மட்டுமே தடையில்லாச் சான்று வழங்கலாம் எனவும் ஓடை சிறிய ஓடை ஆகியவற்றிற்கு அருகில் உள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்க தூரம் ஏதும் கணக்கில் கொள்ள வேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. மேற்கண்ட அரசாணை மற்றும் சுற்றறிக்கையின் படி தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி விவசாய கிணறுகளுக்கு மின் இணைப்பு பெறுவதற்கு தேவையான தடையில்லா சான்று செயற் பொறியாளர்களால் வழங்கப்பட வேண்டும்.
5. எனவே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்ட படி அரசானை மற்றும் சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி விவசாய கிணறுகளுக்கு மின் இணைப்பு பெறுவதற்கு தேவையான தடையில்லா சான்று மாவட்ட ஆட்சித்தலைவர் அல்லது தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்பட வேண்டும் என இவ்வட்டத்தை சார்ந்த செயற் பொறியாளர் பொபது, நீஆஅ, சரபங்கா வடிநிலக்கோட்டம் நாமக்கல் மற்றும் செயற் பொறியாளர் பொபது, நீஆஅ, மேட்டூர் அணை கோட்டம், மேட்டூர்

அணை ஆகியோர்களுக்கு தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவும் பிற துறைகளின் மூலம் கேட்கப்படும் விபரங்களுக்கு தவறான விபரங்களை தெரிவிக்காமல் சரியான விபரங்களை மட்டும் தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் செயற் பொறியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளும்படி மேட்டூர் மின் பகிர்மான வட்டத்திற்க உட்பட்ட அனைத்து கோட்டங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

xiii) இது தொடர்பாக http://www.salem.tn.nic.in/aprofile.htm என்ற வலைய தளத்தில் ஆய்வு செய்த போது தமிழ்நாட்டு ஆறுகள் என்ற தலைப்பிலும் சேலம் மாவட்டம் பற்றி செய்திகள் உள்ள வலை தளத்திலும் சரபங்கா ஆறு என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

xiv) எனவே SE/IEMC/C/EE3/AEE2/ AE/D.178/94 (Tech.Br.) 19-5-1994 வழங்கப்பட்டுள்ள வாரிய விதிமுறைகளின்படியும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய வழங்கல் விதித்தொகுப்பின் Chapter 27 sub section 16 (Explanation- For the removal of doubts, the expression "Other compliances" occurring in the explanation to section 43(1) of the Act as reproduced in sub-regulation (1) above, shall include the following namely:-

(a) The compliance by the intending consumer of other laws of the State of Tamil Nadu relating to the obtaining of permit or approval or sanction or consent from the appropriate authorities as mentioned in such laws in regard to construction, alteration or repairs to buildings .. or other establishments for which supply of electricity is required by such intending consumer."

(b) The compliance by the intending consumer of the provisions contained in sub regulations (11) (wherein it has been stated that the requirement to be notified by the authority through regulations shall be complied with for availing the service connection)

கூறியுள்ள வழிகாட்டுதலின் படியும், செயற்பொறியாளர் / பொதுப்பணித்துறை நீர் ஆதார அமைப்பு / சரபங்கா வடிநிலகோட்டம் / நாமக்கல் அவர்களால் தடையில்லாச் சான்று வழங்கப்பட்டு வருவதாலும், கண்காணிப்பு பொறியாளர் / பொது பணி துறை / நீஆஅ/ சேலம் அவர்களது

க.எண்.113பல/ இவஅ3/2012கோ–505 / நாள் 11.5.2012 நாளிட்ட கடிதத்தில் – “ தெரிவிக்கப்பட்ட படி அரசாணை மற்றும் சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படி விவசாய கிணறுகளுக்கு மின் இணைப்பு பெறுவதற்கு தேவையான தடையில்லா சான்று மாவட்ட ஆட்சித்தலைவர் அல்லது தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்பட வேண்டும்” என தெரிவித்துள்ளதாலும், தமிழக அரசின் வலையதளத்திலும் சரபங்கா ஆறு என்றே வரையறுக்கப்பட்டுள்ளதாலும் சரபங்கா ஆற்றுப்படுகையில் 200 மீ தொலைவிற்குள் உள்ள விவசாய கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்க புதிய விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படும் போதும் / ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு விவசாய மின் இணைப்பு வழங்கும் போதும் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் / பொதுப்பணித்துறை அவர்களிடமிருந்து தடையில்லா சான்று பெற்று மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என சமர்பிக்கப்படுகிறது.

## 6. மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை

6.1 மேல் முறையீட்டாளர், மற்றும் எதிர் மனுதாரர் ஆகிய இருவரும் தங்களுடைய வாதங்களை நேரிடையாக எடுத்துரைப்பதற்கு வசதியாக 16.11.2012 அன்று மின் குறை தீர்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

## 7. மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்

7.1 மேல் முறையீட்டாளரின் சார்பில் திரு.சி.ஜி. இளமுருகன், தலைவர், சேலம் மாவட்ட உபயோகிப்பாளர் உரிமைக் கழகம் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார். மேல் முறையீட்டாளர் இதற்கு முன்பு சரபங்கா நதியின் அருகில் உள்ள கிணறுகளுக்கு தடையில்லா சான்று பெறாமல் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்று வாதிட்டார். மேலும் சங்ககிரி கோட்டத்தில் தடையில்லா சான்று பெறப்படாமல் இதுவரை மின் இணைப்பு வழங்கப்பட்டது என்றும் வாதிட்டார்.

7.2 மேலும் அவர் சரபங்கா நதி என்று பெயர் இருந்தாலும் அந்த ஆற்றில் மழை பெய்யும் பொழுது மட்டும்தான் தண்ணீர் வருகிறது. நதியில் தொடர்ந்து நீர் வருவது இல்லை. மேலும் அதன் குறுக்கே அணை எதுவும் இல்லை. எனவே அது ஒரு காட்டாறு (jungle stream) ஆகும் என்றும் அதனை ஆறாக கருதி தடையில்லா சான்று கேட்பது தவறு என்று வாதிட்டார்.

7.3 மேலும் அவர் சரபங்கா ஆற்றின் அருகில் உள்ள கிணற்றிற்கு தடையில்லா சான்று வாங்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்ற திரு. அம்மாசி த/பெ. மாரிமுத்துவிற்கு வழங்கப்பட்ட சான்றில் சரபங்கா ஆற்றுபடிகையிலுள்ள கிணற்றிலிருந்து நீர் இறைக்க என்று கூறப்படவில்லை. எனவே, முன்பு தடையில்லா சான்று பெறப்பட்டுள்ளது என்பது தவறு என்று வாதிட்டார்.

7.4 மேலும் தடையில்லா சான்றுகள், செயற்பொறியாளர் பெயரில்தான் வழங்கப்படுமே அன்றி பயனாளிகளின் பெயரில் வழங்கப்படாது என்பதையும் சுட்டிக்காட்டி, உரிமம்தாரர் தரப்பில் கூறப்படும் தடையில்லாச் சான்று திரு. அம்மாசி என்று பயனாளியின் பெயரில் உள்ளது என்று தெரிவித்துள்ளார். அதற்கு ஆதாரமாக பொதுப்பணித்துறையினர், மின்சார துறைக்கு கொடுக்கப்பட்ட வேறு தடையில்லா சான்றுகளை கொடுத்துள்ளார்.

7.5 மேலும் அவர் எதிர் மனுதாரரின் வாதங்களுக்கு எதிர் உரையாக (rejoinder) ஒன்றையும் 16.11.2012 அன்று விசாரணையின் பொழுது சமர்பித்தார். அதில் உள்ள வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

i) சரபங்கா நதியில் மழை பெய்யும் நேரங்களில் மட்டுமே தண்ணீர் வருகிறது. சரபங்கா நதியின் குறுக்கே அணை ஏதும் இல்லை. சரபங்கா நதியில் தொடர்ந்து தண்ணீர் செல்வதில்லை. இதற்கு முன்பு சரபங்கா நதியின் அருகில் உள்ள கிணறுகளுக்கு பொதுப்பணித்துறை (நீஆஅ) யின் தடையில்லாச் சான்று கேட்கப்படவில்லை.

ii) மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தில், மேட்டூர் கோட்டத்திற்குட்பட்ட எடப்பாடி வட்டம், சமுத்திரம் கிராமம் ச.எண்.291/5 வாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள கிணற்றுக்கு 3 எச்.பி மின் பளுவிற்கு மின் இணைப்பு பெறுவதற்கு செயற்பொறியாளர் /பொபது / நீஆஅ/ சரபங்கா வடிநில கோட்டம் / நாமக்கல் அவர்களால் தடையில்லாச் சான்று திரு.மா.அம்மாசி, த/பெ. மாரிமுத்து (எ) மாரி, தொப்பைக் கவுண்டர், சமுத்திரம் கிராமம், எடப்பாடி வட்டம் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது (தடையில்லாச் சான்று நகல் இணைக்கப்பட்டுள்ளது.)

iii) மேற்படி தடையில்லாச் சான்றிலேயே நிபந்தனைகள் வரிசை எண்.2 ல் மூன்றாவது வரியில் வாய்க்காலில் இருந்து குழாய் பதிக்கவோ அல்லது வேறு விதத்திலோ தண்ணீர் எடுக்கக் கூடாது என மிகத் தெளிவாக குறிப்பிட்டு மேற்படி தடையில்லாச் சான்று வழங்கப்பட்டுள்ளது. திரு. அம்மாசி என்பவருக்கு சமுத்திரம் கிராமம் ச.எண்.291/5 க்கு வழங்கப்பட்டுள்ள சான்று திரு.அம்மாசி வாய்க்கால் பகுதியில் உள்ள (சரபங்கா ஆற்றுப்படுகையில் அல்ல) தமது கிணற்றிற்கு மின் இணைப்பு பெறுவதற்கு மேற்படி தடையில்லாச் சான்றினை தமது பெயரில் பெற்றுள்ளார்.

iv) சரபங்கா நதி என்பது ஒரு காட்டாறு (jungle stream) என கருதப்பட்டு தடையில்லாச் சான்று பெறாமல் சங்ககிரி மின் கோட்டத்தில் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருவதாக மேட்டூர் மின்பகிர்மான வட்டத்தின் பொது தகவல் அலுவலர் தமது க.எண்.மேபா.பொ/மே/உ.செ.பொ/வளர்ச்சி/ உபொ/கோ.தனி/எண்,1873/11இ நாள் 24.12.11 (கடித நகல்

இணைக்கப்பட்டுள்ளது) ல் கேள்வி 2 க்கு 2ம் பக்கம் பதில் 2ல் சரபங்கா நதி ஒரு காட்டாறு (jungle stream) என தெரிவித்துள்ளார்.

v) கண்காணிப்பு பொறியாளர் / பொதுபது/நீஆஅ/ சேலம் அவர்களது கடித எண்.113 பல/இவஅ3/2012 கோ/505/நாள் 11.5.2012 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விபரங்கள் புதிதான ஒன்று அல்ல. ஏற்கனவே பொதுப்பணித்துறையின் மேட்டூர் அணைக் கோட்ட செயற்பொறியாளர் (நீஆஅ) கடித எண்.வப./வ1/கோ.7/153 ஆ/04/25.5.2004 நாளிட்ட கடிதம் மூலம் விவசாய மின் இணைப்பு நதி, கால்வாய், ஓடை பகுதிகளில் பெறுவதற்கு தடையில்லாச் சான்று பெறவேண்டும் என்று தெளிவாக நடப்பிலுள்ள அரசாணை மற்றும் சுற்றறிக்கைகள் குறித்த விபரங்களை வரிசை எண்.1,2 மற்றும் 3 ல் குறிப்பிட்டு எமது அமைப்பிற்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

vi) மேற்படி கடிதத்தில் சரபங்கா நதி குறித்து அரசாணை / சுற்றறிக்கை எதுவும் குறிப்பிடப்படவில்லை. இக்கடிதத்தின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளும்படி மேட்டூர் மின் பகிர்மான வட்டத்திற்குட்ட அனைத்து கோட்டங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது என தெரிவித்துள்ள மேற்பார்வை பொறியாளர் அவர்களின் உத்திரவு சரபங்கா நதிக்கரை பகுதியில் மின் இணைப்பு வழங்குவதற்கு பொருந்தாது.

vii) மேலும் சரபங்கா நதி படுகையில் மின் இணைப்பு வழங்குவது தொடர்பாக, தடையில்லாச் சான்று சம்மந்தமாக மின் வாரியத்தின் சங்ககிரி கோட்ட செயற்பொறியாளர் அவர்களின் கடிதத்திற்கு, செயற்பொறியாளர் / பொபது/நீஅஅ/ மேட்டூர் அணைக் கோட்டம் / மேட்டூர் அவர்கள் க.எண்.வபி/வ1/கோ7/ /2002 / நாள் 30.7.2002 நாளிட்ட கடிதம் (கடித நகல் இணைக்கப்பட்டுள்ளது) ஒன்றினை அனுபியுள்ளார். அக்கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

viii) சங்ககிரி வட்டம், தேவூர் கிராமம், காணியாளம்பட்டி ச.எண்.400/1சி2 ல் உள்ள மிகப்பெரிய கிணறு சுமார் 400 மீட்டர் இடைவெளியில் சரபங்கா நதி ள்ளது. 500 மீட்டர் இடைவெளியில் காவிரி நதி உள்ளது எனவும், காவிரி நதியிலிருந்து கிணற்றுக்கு, இடைப்பட்ட தூரம் அரசு ஆணை வழங்கியுள்ள தூரத்திற்கு அதிகம் உள்ளதால் தடையில்லாச் சான்று பெறப்படவில்லை. மேற்கண்ட சரபங்கா நதிக்கு தடையில்லா சான்று பெற வேண்டுமென்பதில் ஏதேனும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா அல்லது தடையில்லாச் சான்று பெறப்பட வேண்டுமா என தெரியப்படுத்துமாறு தங்களது கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

ix) தலைமைப் பொறியாளர் (பொபது) பாசனம், சென்னை–5 சுற்றறிக்கை எண்.பி2/12606/93/நாள் 7.1094 ல் தடையில்லாச் சான்று வழங்க அனுமதிக்கப்பட்ட தூரமான 200 மீட்டரானது ஆறுகளுக்கு மட்டுமே பொருந்தும் எனவும் மழை பெய்யும் பொழுது சில மணி நேரங்களுக்கு தண்ணீர் ஓடும் காட்டாறு மற்றும் ஓடை போன்ற இனங்களுக்கு 200 மீட்டர் தூரமானது பொருந்தாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. சரபங்கா நதியில் மழை பெய்யும் நேரங்களில் மட்டுமே தண்ணீர் வருகிறது. நதியின் குறுக்கே அணை ஏதும் இல்லை. சரபங்கா நதியில் தொடர்ந்து தண்ணீர் செல்வதில்லை. இதற்கு முன்பு சரபங்கா நதியின் அருகில் உள்ள கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்புகளுக்கு இத்துறையின் தடையில்லாச் சான்று ஏதும் கேட்கப்படவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

x) மேலும் அக்கடிதத்தில் 7 வது பத்தியில் சரபங்கா நதியில் மழை பெய்யும் பொழுது மட்டும் தண்ணீர் வருகிறது என்பதை கருத்தில் கொண்டும் இதற்கு முன்பு சரபங்கா நதியின் அருகில் உள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு எவ்வாறு வழங்கப்பட்டதோ அதன் அடிப்படையிலும் மின் இணைப்பு வழங்க இத்துறையின் மூலம் தடையில்லாச் சான்று பெற வேண்டியதில்லை என மிகத் தெளிவாக குறிப்பிட்டு சரபங்கா நதி படுகையில் மின்னிணைப்பு பெற தடையில்லாச் சான்று பெறத் தேவையில்லை என்று கடந்த 2002 ம் ஆண்டே மின் வாரியத்தின் சந்தேகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். சரபங்கா நதியின் அருகில் மின் இணைப்பு வழங்குதல் குறித்து மேற்சொன்ன கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தலைமை பொறியாளர் (பொபது) பாசனம், சென்னை–5 அவர்களின் சுற்றறிக்கையை வழிகாட்டுதலாக கொண்டு பொதுப்பணித்துறையின் மேல்காவேரி வடிநில வட்டத்திற்குட்பட்ட சரபங்கா வடிநிலக் கோட்டம், மேட்டூர் அணைக்கோட்டம் ஆகிய இரு கோட்டங்களின் செயற்பொறியாளர்கள் சரபங்கா நதியின் அருகில் மின் இணைப்பு பெறுவதற்கு தடையில்லாச் சான்றினை எப்போதும் வழங்கியதில்லை.

xi) இவ்விஷயத்தில் பொதுப்பணித்துறையின் மேட்டூர் அணைக் கோட்டமும், சரபங்கா வடிநிலக் கோட்டமும் ஒரே நடைமுறையை (uniform proceedure) மேற்கொண்டு வருகின்றன.

xii) மேட்டூர் மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட ஓமலூர் மின் கோட்டம், மேட்டூர் மின் கோட்டம் மற்றும் சங்ககிரி மின்கோட்டம் ஆகிய கோட்டங்களின் வரம்புகளில் வரும் சரபங்கா நதிக்கரையில் 200 மீட்டருக்குள் அமைந்துள்ள விவசாய கிணறுகளுக்கு பொதுப்பணித்துறையின் தடையில்லாச் சான்று எதுவும் கேட்காமலே நூற்றுக்கணக்கான விவசாய மின் இணைப்புகள் மேற்படி மூன்று மின் கோட்டங்களும் வழங்கியுள்ளன.

xiii) பொதுப்பணித்துறை (நீஆஅ) சரபங்கா நதி படுகையில் விவசாய மின் இணைப்பு பெற தடையில்லாச் சான்று வழங்க இயலாத நிலையில் மின்வாரியம் தடையில்லாச் சான்று வேண்டும் என புதிய நடைமுறையை திடீரென கொண்டு வந்ததால் இது தொடர்புடைய விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

xiv) சரபங்கா நதிக்கரையில் உள்ள விவசாய கிணற்றுக்கு பொதுப்பணித்துறையின் தடையில்லாச் சான்று கேட்டு மின் இணைப்பு வழங்குவதை மேட்டூர் மின் கோட்டம் திரு.இடும்பன் அவர்களுக்கு நிறுத்தி வைத்துள்ளதால் இந்த ஏழை விவசாயி மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார். விவசாயம் தொடர்ந்து செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதே காரணத்திற்காக இவரை போன்ற பல விவசாயிகளும் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

xv) ஆகவே மின்குறை தீர்ப்பாளர் அவர்கள் இதனை சிறப்பினமாக கருதி தேவையான நடவடிக்கை மேற்கொண்டு மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயி திரு.இடும்பன் அவர்களுக்கு சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்குவதை தவறுதலாக நிறுத்தி வைக்கப்பட்டதை பரிசீலனை செய்து சுயநிதி திட்டத்தின் கீழ்அவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட முன்னுரிமை தேதி மாறாமல் மின் இணைப்பு வழங்குவதற்கு மேட்டூர் மின்கோட்ட செயற்பொறியாளர் அவர்களுக்கு உரிய உத்திரவினை தாங்கள் அளிக்க கேட்டுக் கொள்வதோடு, தனிப்பட்ட ஒரு விவசாயின் பிரச்சினை என இதனை கருதாமல் ஒட்டு மொத்த

விவசாயிகளின் வாழ்வாதாரமாக கருதி நிரந்தர தீர்வாக விவசாயிகள் சரபங்கா நதிக்கரை பகுதிகளில் எளிதில் விவசாய மின்இணைப்பு பெறும் வகையில் மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தின் மேற்பார்வை பொறியாளர் சரபங்கா நதி தொடர்புடைய உத்திரவினை இரத்து செய்திட தேவையான உத்திரவுகள் வழங்கியும் விவசாயிகளின் நலன் பேண தங்களை மிகவும் மீண்டும் வேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

8, <u>எதிர்மனுதாரரால் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள்:</u>

8.1 எதிர்மனுதாரரின் சார்பில் கேட்புரை நாளில் திரு.எம்.செல்வம், உதவி செயற் பொறியாளர்/ ம.தொ.அ. மற்றும் வளர்ச்சி மேட்டூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் கலந்து கொண்டு எதிர் மனுதாரரின் வாதங்களை எடுத்துரைத்தார்.

8.2 அவர், மேட்டூர் கோட்டத்தில் இதுவரை தடையில்லா சான்று பெற்றுதான் சரபங்கா நதியின் அருகில் உள்ள கிணறுகளக்கு விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டதாக கூறினார். திரு.அம்மாசி என்பவரை தவிர மற்ற நுகர்வோரால் சமர்பிக்கப்பட்ட தடையில்லா சான்றுகளை தருவதாக கூறினார்.

8.3 மேலும், அவர், ஒரு நதியை, காட்டாறு அல்லது நதி என்று வகைப்படுத்துவது மற்றும் தடையில்லா சான்று தேவையில்லை என்பதை முடிவு செய்யும் அதிகாரம், பொதுப்பணித்துறையை சார்ந்தது என்றும், நுகர்வோர் அல்லது மின்சாரவாரியம் தீர்வு செய்ய முடியாது என்று கூறினார். மேலும் சேலம் மாவட்டத்தை பற்றிய வலைய தளத்திலும் ஆறுகள் என்ற தலைப்பில் தான் சரபங்கா ஆறு உள்ளது என்றும் எனவே அதை காட்டாறு என்று கருதி தடையில்லா சான்று தேவையில்லை என்ற மேல் முறையீட்டாளரின் வாதுரை தவறு என்றும் வாதிட்டார்.

8.4 மேலும் அவர், மேல்முறையீட்டாளர் கோரியபடி செயற் பொறியாளர் மேட்டூர் கோட்டம், பொதுப்பணித்துறைக்கு இந்த மேல் முறையிட்டில் குறிப்பிடப்பட்டுள்ள திரு.இடும்பன் அவர்களின் கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்க தடையில்லா சான்று கேட்டு கடிதம் எழுதுவதற்கு ஒப்புதல் அளித்து, உடனே ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

8.5 மேலும் அவர் பொதுப்பணித்துறையிலிருந்து சரபங்கா நதிக்கரையில் உள்ள கிணறுகளுக்கு தடையில்லா சான்று தேவை அல்லது இல்லை என்பது பற்றிய தெளிவுரை கிடைக்கப் பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டும், தெளிவு கிடைக்கப்பெறவில்லை என்றும் தெரிவித்தார்.

8.6 மேலும் அவர் உறுப்பினர் (பகிர்மானம்) அவர்களின் 5.8.94 குறிப்பாணையை குறியீட்டு காட்டி அந்த ஆணையின் படி ஒரு கால்வாய் /வாய்க்கால் / நீர்நிலை

ஆதாரம் என்பதற்கான விளக்கம் மற்றும் எந்த ஆறு / கால்வாய் / வாய்க்கால் / நீர்நிலை ஆதாரம் உள்ள இடங்களில் மின்சார இணைப்பு வழங்க கூடாது என்பதனையும் செயற்பொறியாளர் பொதுப்பணித்துறையிடமிருந்து உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும், எங்கெல்லாம், பொதுப்பணித்துறை மறுப்பில்லா சான்று பெறப்படவேண்டும் என்று வற்புறுத்துகிறதோ, அந்த இடங்களுக்கு மின் இணைப்பு வேண்டும் என்று கோரும் நுகர்வோரை பொதுப்பணித்துறையின் மறுப்பில்லா சான்றுதனை வாங்கி வருமாறு தெரிவிக்க வேண்டும் என்றும் உத்திரவிடப்பட்டுள்ளது என்று கூறினார்.

**9. <u>எதிர்மனுதாரரின் எழுத்துபூர்வமான வாதங்கள் (written arguments)</u> :**

(i) செயற்பொறியாளர்/இ–ப/மேட்டூர் கோட்டம் அவர்கள் 19–11–12 நாளிட்ட கடிதத்தில் செயற்பொறியாளர்/நீர்வளஆதாரஅமைப்பு/சரபங்கா வடிநில கோட்டம்/நாமக்கல் அவர்களுக்கு திரு.இடும்பன் , த/பெ முத்துசாமி கவுண்டர் மாரிகவுண்டன் காடு அவர்களது கிணறு சரபங்கா நதி அருகில் 200 மீட்டருக்குள் அமைந்துள்ளது. மேற்படி விண்ணப்பதாரர் கிணற்றிற்கு பொதுப்பணி துறையிடமிருந்து சரபங்கா நதிக்கு தடையில்லா சான்று பெறவேண்டுமா அல்லது தடையில்லா சான்று பெறவேண்டும் என்பதிலிருந்து ஏதேனும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா என்று குறித்து தெரிவிக்குமாறு கடிதம் 19–11–12 அன்று வரையப்பட்டுள்ளது.

(ii) மேலும், மேற்பார்வைப்பொறியாளர்/மேட்டூர் மின் பகிர்மான வட்டம்/மேட்டூர் அவர்களிடமிருந்து கண்காணிப்பு பொறியாளர்/பொதுப்பணித்துறை அமைந்துள்ள விவசாய கிணறுகளுக்கு மின்னிணைப்பு வழங்குவதற்கு பொதுப்பணித்துறையிடமிருந்து தக்க தெளிவுரை வழங்கும்படி கடிதம் 20–11–12 அன்று வரையப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக நினைவூட்டு கடிதம் 10–12–12 அன்றும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர்/நீர்வளஆதாரஅமைப்பு/சேலம் அவர்களிடமிருந்து நாளது தேதிவரை பதில் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

(iii) செயற்பொறியாளர்/ பொதுப்பணித்துறை/ நீர்வளஆதாரஅமைப்பு/ சரபங்காவடிநில கோட்டம் /நாமக்கல் அவர்களை உதவி செயற்பொறியாளர்/இ–ப/எடப்பாடி நகர் அவர்கள் நேரடியாக அவரது அலுவலகத்தில் தொடர்பு கொண்டதன் பேரில் அவர்களது 10–12–12 நாளிட்ட கடிதத்தில் செயற்பொறியாளர்/இ–ப/மேட்டூர் அவர்களுக்கு பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

*" இக்கோட்ட கட்டுப்பாட்டில் உள்ள எல்லை வரை உள்ள சரபங்கா நதி ஆற்றங்கரையிலிருந்து 200 மீட்டருக்கு மேல் உள்ள ஆழ்துளை கிணறுகள் மற்றும் கிணறுகளுக்கான புதிய விவசாய மின்னிணைப்பிற்கு பொதுப்பணித்துறையின் மூலம் தடையில்லா சான்று வழங்கப்படும் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது"*

(iv) மேலும், மேட்டூர் மின்பகிர்மான வட்டத்திற்குட்பட்ட மேட்டூர் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் சரபங்கா நதிக்கு 200 மீட்டருக்குள் 104 விவசாய மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அதில் 4 மின்னிணைப்புகள் பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று பெற்று மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தடையில்லா சான்று பெற்று 4 விண்ணப்பங்கள் தயார் நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(v) ஓமலூர் கோட்டத்தில் சரபங்கா வடிநிலகோட்டத்தில் 200 மீட்டருக்குள் இதுவரை எந்த விவசாய மின்னிணைப்புகள் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**10. <u>மேல்முறையீட்டாளரின் 26–12–2012 நாளிட்ட கடிதத்தில் உள்ள எழுத்து வடிவிலுள்ள வாதங்கள்</u> :**

(i) பொதுப்பணித்துறையின் செபொ/நீஆஅ/சரபங்கா வடிநில கோட்டம்/நாமக்கல் அவர்களின் கடிதத்தில், " சரபங்கா நதியின் ஆற்றங்கரையில் இருந்து 200 மீட்டருக்கு மேல் உள்ள ஆழ்துளை கிணறுகள் மற்றும் கிணறுகளுக்கான புதிய விவசாய மின்னிணைப்புக்கு தடையில்லா சான்று வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது "

(ii) திரு. இடும்பன் த/பெ முத்துசாமிகவுண்டர், மாரிகவுண்டன் காடு அவர்களின் கிணறு சரபங்கா ஆற்றங்கரையோரம் 200 மீட்டருக்குள் அமைந்துள்ளது. பொதுப்பணித்துறையின் சரபங்கா வடிநில கோட்டம் நாமக்கல் செயற்பொறியாளர் அவர்களின் கடிதத்தின்படி பொது.ப.து.விடமிருந்து திரு. இடும்பன் தமது கிணற்றிற்கு விவசாய மின்னிணைப்பு பெற எவ்வித தடையில்லா சான்று பெறவேண்டிய அவசியம் இல்லை.

(iii) மேட்டூர் மின்பகிர்மான வட்டம் விவசாயிகளின் நிலை உணராது சரபங்கா ஆற்றங்கரையோரம் 200 மீட்டருக்குள் உள்ள விவசாய கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளுக்கு பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று பெற்றுத்தரவேண்டும் என்று முரண்பாடான சான்றுகளின் அடிப்படையில் இதுகுறித்து முரண்பாடான உத்தரவுகளையும்,

முரண்பாடான தகவல்களையும் தங்கள் மட்டத்தில் தெரிவித்து வருகிறது இதன் காரணமாக இது தொடர்புடைய விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

## 11. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு :</u>

**11.1** மேல் முறையீட்டாளரின் வாதங்கள் எதிர்மனுதாரரின் வாதங்கள் மற்றும் மேல் முறையீட்டாரும் எதிர் மனுதாரரும் கேட்புரை நாட்களில் எடுத்துரைத்த வாதங்கள் எழுத்து வடியில் அவர்கள் சமர்பித்த வாதங்கள் மற்றும் அவர்கள் சமர்பித்த ஆவணங்கள் ஆகிய அணைத்தும் மின்குறை தீர்ப்பாளரால் ஆராயப்பட்டு, மின்குறை தீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**11.2** இந்த மேல் முறையீட்டு மனுவின் கோரிக்கை சரபங்கா நதிக்கரையிலுள்ள திரு.இடும்பன் அவர்களின் திறந்த வெளிக் கிணற்றிற்கு பொதுப்பணிதுறையின் தடையில்லா சான்று பெறாமல் மின் இணைப்பு பெற வேண்டும் என்பதுதான். எனவே, இந்த வழக்கில் கீழ்கண்டவைகளை வழக்கெழு வினாக்களாக தீர்மானிக்கப்படுகின்றன.

1. நதிக்கரையிலுள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் எனில், பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று பெறவேண்டுமா ?
2. சரபங்கா நதிக்கரையிலுள்ள கிணறுகளுக்கு விவசாய மின் இணைப்புபெற, பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று பெற வேண்டுமா ?
3. இந்த மனுதாரருக்கு ஏதேனும் நிவாரணம் (relief) வழங்க முடியுமா ?

## 12. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு:</u>

**12.1** எதிர் மனுதாரர், தலைமையகத்தின் குறிப்பாணை எண். SE/IEMC/C/EE3/AEE2/ AE/D.178/94 (Tech.Br.) 19-5-1994 குறிப்பிட்டு தமிழ் நாட்டிலுள்ள ஆறுகளிலிருந்தும் / பிற நீர் ஆதாரங்களிலிருந்தும் 200 மீட்டர் தொலைவிற்குள் உள்ள விவசாய கிணறுகளுக்கு தடையில்லா சான்று பெற்ற பிறகே மின் இணைப்பு வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து தடையில்லா சான்று பெற்ற பின்னர்தான் மின் இணைப்பு வழங்க இயலும் என்று தெரிவித்துள்ளார். மேலும் 5.8.94 தேதியிட்ட ஆணையும் குறிப்பிட்டு பொதுப்பணித்துறையினர்தான், எந்தக் கால்வாய் / வாய்க்கால் / நீர் ஆதாரம் ஆகியவற்றிற்கு தடை உள்ளது என்று கூறமுடியும் என்பதனையும் தெரிவித்துள்ளார்.

**12.2** மேல் முறையீட்டாளர், பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று நதிக்கரையில் உள்ள கிணறுகளுக்கு தேவை இல்லை என்று வாதிடவில்லை. அவரின் வாதம் சரபங்க

நதிக்கு அருகில் உள்ள கிணறுகளுக்கு அந்த தடையில்லா சான்று அவசியம் இல்லை என்பது தான்.

12.3 எனினும், மேற்கண்ட வினாவிற்கு தீர்வுகான எதிர்மனுதாரர், குறிப்பிட்டுள்ள குறிப்பாணைகளை ஆராய வேண்டும். உரிமம்தாரரின் 19.5.1994 நாளிட்ட குறிப்பாணை மற்றும் 5.8.1994 நாளிட்ட குறிப்பாணை ஆகியவற்றின் true extract கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" Circular Memo No.SE/IEMC/EE3/AEE2/Ae/D.178/94 (Technical br.) dated 19.5.1994*

*Sub: Electricity-Extension of Supply to the Agricultural Pumpsets situated in the River/channel/Bank – instructions – reg.*
*Ref: Lr.No.SE/IEMC/EE3/AEE2/D.801/93 dated 19.11.93.*

*Of late, it is seen that number of representations and references are being received from the Agricultural Consumers / Government, regarding extension of supply to the Agricultural pumpsets situated near the rivers/canals.*

*There are also references received from the CE/SE/Public Works department of concerned jurisdiction stating that the agricultural pumpsets in the wells near the rivers/canals are illegally used for drawing water from the river/canals directly. In the letter cited under reference, it has been instructed not to effect supply to the agricultural pumpsets situated within 200 mts. from the river banks.*

*Hence, the field officiers are requested to adhere the following instructions in future without fail.*

1. *The applications for extension of supply to the agricultural pumpsets especially in cases under Self Financing scheme have to be thoroughly scrutinised and the cases where the wells lie within 200 meters from any river bank/ canal/ channel/ any water resources should not be entertained and they should be returned at the initial stage itself even before collection of the registration fee Rs.500/-.*
2. *In cases where an individual applicant / some society as the case may be applies for extension of supply to the agricultural service by drawing water from well situated within 200 meters from any river / any other water resources, the field officers themselves have to verify whether the G.Os. or any other certificate issued are genuine and satisfy the actual distance of the well from the river and other resources in accordance with the G.Os./ any other certificates issued.*
3. *For the cases of applications under normal priority/self financing scheme for which extension of supply is requested to the wells lying within 200 meters from any river bank/any other water resources have*

*already been entertained and processed before the issue of the above instructions and the progress in various stages like :*

*i) Reported readiness / works completed*
*ii) Reported readiness with party paid the amount/works not taken up/partly completed.*
*iii) Reported readiness/party not paid the amount.*

*then in all above three cases supply should be extended only on submission of No Objection Certificate from the concerned SE / PWD, by the parties.*

*The above stipulations will also apply to additional loads in agricultural services where the wells are within 200 meters from the bank of water resources.*

*In cases of the applications requiring supply to the agricultural pumpsets for the wells situated 200 meters away from any river / water resources, the field officers themselves can process after satisfying about the distance and checking the genuiness of the certificates issued by the authorities concerned.*

*P.Suresh Chander Pal*
*Member (Distribution)*

*Memo No.SE/IEMC/EE3/AEE2/AE/D.294/94 (Technical Branch) dated 5.8.1994*

*Sub: Elecy-extension of supply to the agricultural pumpsets situated in the river/channel/bank – instructions – regarding.*

*Ref: 1. Circular Memo No.SE/IeMC/EE3/AEE2/Ae/D.178/94 dated 19.5.1994.*

*2. Circular Memo No.SE/IeMC/EE3/AEE2/AE/D.276/94 dated 19.5.1994*

*Many of the field officers have expressed the difficulties in implementing the instructions issued in the Circular Memo dated 19.5.94 cited under reference (1) and requested further instructions. The matter has been examined and the following clarification is issued.*

*The Circular Memo dated 19.5.94 has been issued based on the letter from the Special Commissioner and Commissioner for land administration to the Chairman/TNEB. Hence the instructions issued in the circular memo dated 19.5.94 will stand.*

*However, the exact description for (a) the Canal/channel/water resources and (b) whether a particular river/canal/channel/water resource for which the extension of supply to agricultural pumpset is banned may be ascertained from the EE/Public works department. Whever the PWD authorities insist on clearance, the parties may be advised to obtain No Objection certificate from PWD to proceed further for extension of supply.*

*P.Suresh Chander Pal*
*Member (Distribution)"*

**12.4** மேற்கண்ட குறிப்பாணையின்படி ஆறு/கால்வாய்/வாய்க்கால்/ ஏதாவது நீர் ஆதாரத்திலிருந்து **200** மீட்டருக்குள் உள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தால் விண்ணப்பம் பதிவு செய்யப்படாமல் நிராகரிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது .

**12.5** மேலும் சாதாரண, சுயநிதி திட்டங்களின் கீழ் விவசாய விண்ணப்பம் இந்த குறிப்பாணை வழங்கப்படுவதற்கு முன்பு பதிவு செய்யப்பட்டு அதன் மீதான நடவடிக்கை கீழ்கண்ட வெவ்வேறு நிலைகளில் இருந்தாலும், அந்த விண்ணப்பங்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமெனில் அந்த மேற்பார்வை பொறியாளர் / பொதுப்பணித்துறையினால் வழங்கப்படும் தடையில்லா சான்று பெறப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(i) தயார் நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது / வேலை முடிந்துவிட்டது

(ii) தயார்நிலை பதிவு செய்யப்பட்டு நுகர்வோர் பணம் கட்டியுள்ளார் வேலை ஆரம்பிக்கப்படவில்லை

(iii) தயார்நிலை பதிவு செய்யப்பட்டு மனுதாரர் பணம் செலுத்தவில்லை

**12.6** **5.8.94** நாளிட்ட குறிப்பாணையை கூர்ந்து படிக்கும் பொழுது, கால்வாய் / வாய்க்கால் மற்றும் நீர் ஆதாரம் போன்றவற்றின் (description) முழு விவரத்தையும் அறிந்து கொள்வதற்காகவும் மற்றும் ஒருகுறிப்பிட்ட ஆறு/கால்வாய் / வாய்க்கால் / நீர் ஆதாரம் ஆகியவை விவசாய மின் இணைப்பு பெற தடை செய்யப்பட்டயிடமா என்பதையும் பொதுப்பணித்துறையின் செயற் பொறியாளர்களிடம் இருந்து தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் எந்த எந்த இடங்களுக்கு பொதுப்பணித்துறையின் அதிகாரிகளின் தடையில்லா சான்று வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதோ அந்த இடங்களுக்கு தடையில்லா சான்று பெறவேண்டும் என்று நுகர்வோர் அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

12.7 எனவே, மேற்கண்ட இரண்டு குறிப்பாணைகளையும் இணைத்து பார்க்கும் பொழுது ஆறு / கால்வாய்/ வாய்க்கால்/ நீர் ஆதாரங்களுக்கு 200 மீட்டருக்கு அருகில் உள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளிக்கப்பட்டால்அந்த விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட வேண்டாம் என்றும் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு வெவ்வேறு நிலைகளிலுள்ள விண்ணப்பங்களுக்கு பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று பெற்று மின் இணைப்பு கொடுக்கலாம் என்று அறிய முடிகிறது. மேலும் ஆறு/ கால்வாய் / வாய்க்கால் / நீர் நிலை ஆதாரம் என்பதற்கான விளக்கத்தையும் எந்த ஆறு, கால்வாய், வாய்க்கால்களுக்கு அருகிலுள்ள விவசாய பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கக் கூடாது என்ற தகவலையும் பொதுப்பணித்துறையின் செயற் பொறியாளரிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், எங்கெல்லாம் பொதுப்பணித்துறை தடையில்லா சான்று வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறதோ அங்கு நுகர்வோர் தடையில்லா சான்று பெற்று வரவேண்டும் என்று அறிவுறுத்தப்படவேண்டும் என்றும் கூறுப்பட்டுள்ளது என்று தெளிவாக தெரிகிறது.

12.8 எனவே, ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு நதிக்கரையில் 200 மீட்டருக்குள் உள்ள கிணறுகளுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டும் எனில் பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று வேண்டும் என்றும் மற்றும் பொதுப்பணித்துறையால் அறிவுறுத்தப்படும் இடங்களில், அச்சான்றுகள் பெறப்படவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

13. <u>வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வு</u>

13.1 மேல் முறையீட்டாளர் சரபங்கா நதி என்பதில் பெயரில்தான் நதி உள்ளது ஆனால் அதில் மழைக் காலங்களில் மட்டும் தான் தண்ணீர் வருகிறது என்றும் அதன் குறுக்கே அணை எதுவும் இல்லை என்றும் தெரிவித்து உள்ளார். மேலும் தலைமைப்பொறியாளர் (பொபது) பாசனம் சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.பி2 / 12600/93 நாள் 7.10.94 ல் தடையில்லா சான்று வழங்க அனுமதிக்கப்பட தூரமானது ஆறுகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் மழை பெய்யும் பொழுது சில மணி நேரங்களுக்கு தண்ணீர் ஓடும் காட்டாறு மற்றும் ஓடை போன்றவற்றிற்கு அது பொருந்தாது என்று கூறியுள்ளதை சுட்டிக்காட்டி, சரபங்கா நதிக்கு அது பொருந்தாது என்று கூறினார். மேல்முறையீட்டாளர் சரபங்கா நதி ஒரு காட்டாறுதான் (jungle stream) எனவே தடையில்லா சான்று தேவையில்லை என்று வாதிட்டார்.

13.2 மேலும் அவர் செயற் பொறியாளர் / பொபது/நீஆஅ/மேட்டூர் அணைக்கோட்டம் / மேட்டூர் அவர்களின் க.எண்.வபி/வ1/கோ7/282/2002 நாள் 30.7.2002 அக்கடிதத்தின் 7 வது பத்தியை சுட்டிக்காட்டி அந்த பத்தியில் கீழ்கண்டவாறு கூறுப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

*“சரபங்கா நதியில் மழை பெய்யும்பொழுது மட்டும் தண்ணீர் வருகிறது என்பதை கருத்தில் கொண்டும், இதற்கு முன்பு சரபங்கா நதியின் அருகில் உள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு எவ்வாறு வழங்கப்பட்டதோ அதன் அடிப்படையிலும் மின் இணைப்பு வழங்க இத்துறையின் மூலம் தடையில்லா சான்று பெற வேண்டியதில்லை.”*

என மிக தெளிவாக குறிப்பிட்டு சரபங்கா நதி படுகையில் மின்னிணைப்பு பெற தடையில்லாச் சான்று பெற தேவையில்லை என்று கடந்த 2002 ம் ஆண்டே மின் வாரியத்தின் சந்தேகத்திற்கு செயற்பொறியாளர்/பொது.ப.து/நீ.ஆ.அ/மேட்டூர் அணைக் கோட்டம் அவர்கள் முற்றுபுள்ளி வைத்துள்ளார் என்று வாதிட்டார்.

13.3 எதிர் மனுதாரர், தலைமை பொறியாளர் (பா) சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.பி2/1260/93 நாள் 7.10.1994 ன்படி ஆயக்கட்டு இல்லாத பகுதிகளில் வரும் கிணறுகளுக்கு ஆற்றிலிருந்து 200 மீட்டருக்கு மேல் இருந்தால் மட்டுமே தடையில்லா சான்று வழங்கலாம் எனவும், ஓடை, சிறிய ஓடை ஆகியவற்றிற்கு அருகில் உள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்க தூரம் எதுவும் கணக்கில் கொள்ள வேண்டாம் என்ற சுற்றறிக்கையை எடுத்துக்காட்டி ஆறுகளின் அருகில் உள்ள கிணறுகளுக்கு தடையில்லா சான்று அவசியம் என்று வாதிட்டார். மேலும் சரபங்கா ஆறு சேலம் மாவட்ட வலைய தளையத்தில் ஆறு என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து அந்த வலை தளத்தில் எடுக்கப்பட்ட தகவலின் நகலையும் அளித்துள்ளார். அதில் சேலம் மாவட்டத்தில் உள்ள நதிகள் என்ற தலைப்பில் காவேரி, சரபங்கா, வசிஷ்டா. மற்றும் சுவேதா என்ற நதிகள் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது. எனவே சரபங்கா என்பது நதியாகத்தான் வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அது (jungle stream) காட்டு ஓடையாக வகைப்படுத்தப்படவில்லை என்றும் வாதிட்டு, நதி என்பதினால் தலைமைப் பொறியாளர் (பா) சென்னையின் சுற்றறிக்கை நாள் 7.10.1994 ன் படி தடையில்லா சான்று வேண்டும் என்று வாதிட்டார்.

13.4 மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 5.8.1994 நாளிட்ட குறிப்பாணையின்படி, ஒரு ஆறு / கால்வாய் / வாய்க்கால் / நீர் ஆதாரம் உள்ள இடம், விவசாய பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க தடை செய்யப்பட்ட இடமா என்பதை பற்றி தெளிவுபடுத்த வேண்டியது

செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை தான் என்றும், மேலும் கால்வாய் / வாய்க்கால் / நீர் ஆதாரம் எது என்பதையும் தெளிவு படுதுவதும், பொதுப்பணித்துறை என்று கூறியுள்ளதை தெரிவித்து, அதன் காரணமாக மேற்பார்வை பொறியாளர் / பொதுப்பணித்துறை/ நீஆஅ / சேலம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட தெளிவுரையில் நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல் நெறிகள் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் அந்த தெளிவுரையில் கீழ்கண்டவாறு கூறியுள்ளதையும் எடுத்துரைத்துள்ளார்.

*“ பார்வையில் காணும் தங்களது கடித எண்களில் கேட்டுக் கொண்ட பொருள் தொடர்பான கோரிக்கையான விவசாய கிணறுகளுக்கு மின்னிணைப்பு பெறுவதற்கு தடையில்லா சான்று வழங்குவது குறித்து கீழ்க்கண்டவாறு விவரங்கள் தெரிவிக்கப்பட்டுகின்றது.*

1. *அரசு ஆணை எண்.1205/பொது.ப.து/நாள் 12.5.1964 மற்றும் அரசு கடித எண். 29267/எஸ்3/பொபது/28.6.1985இன்படி தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி மேட்டூர் கால்வாயின் பிரதான வாய்ககாலில் இருந்து 50 மீட்டருக்குள்ளும் பகிர்வு வாய்க்காலிலிருந்து 24 மீட்டருக்குள்ளும் உள்ள பழைய கிணறுகளுக்கு அதாவது மேட்டூர் கால்வாய் வெட்டப்படுவதற்கு முன்பே வெட்டப்பட்ட கிணறுகளுக்கு மட்டும் மின்னிணைப்பு வழங்க தடையில்லாச் சான்று வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*
2. *அரசு ஆணை எண்.3339/பொபது/நாள் 12.12.1962இன்படி காவிரி ஆற்றின் கரையிலிருந்து 200 மீட்டருக்கும் மேட்டூர் கால்வாய் ஆயக்கட்டு பகுதியில் உள்ள பழைய கிணறுகளுக்கு (மேட்டூர் கால்வாய் வெட்டுவதற்கு முன்பு வெட்டப்பட்டுள்ள கிணறுகளுக்கு ) மின்னிணைப்பு வழங்க தடையில்லாச் சான்று வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*
3. *தலைமைப்பொறியாளர்(பா) சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.பி2/1200/93/நாள் 7.10.1994இன்படி ஆயகட்டு இல்லாத பகுதிகளில் வரும் கிணறுகளுக்கு ஆற்றிலிருந்து 200 மீட்டருக்கு மேல் இருந்தால் மட்டுமே தடையில்லாச் சான்று வழங்கலாம் எனவும் ஓடை, சிறிய ஓடை ஆகியவற்றிற்கு அருகில் உள்ள கிணறுகளுக்கு மின்னிணைப்பு வழங்க தூரம் ஏதும் கணக்கில் கொள்ள வேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*4. மேற்கண்ட அரசாணை மற்றும் சுற்றறிக்கையின்படி தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி விவசாய கிணறுகளுக்கு மின்னிணைப்பு பெறுவதற்கு தேவையான தடையில்லாச் சான்று செயற்பொறியாளர்களால் வழங்கப்பட வேண்டும்.*

*5. எனவே, மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டபடி அரசாணை மற்றும் சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி விவசாய கிணறுகளுக்கு மின்னிணைப்பு பெறுவதற்கு தேவையான தடையில்லாச் சான்று மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்பட வேண்டும் என இவ்வட்டத்தைச் சேர்ந்த செயற்பொறியாளர் பொபது, நீஆஅ, சரபங்கா வடிநில கோட்டம், நாமக்கல் மற்றும் செயற்பொறியாளர், பொதுபது. நீஆஅ, மேட்டூர் அணைக்கோடட்ம், மேட்டூர் அணை ஆகியவற்றிற்கு தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவும் பிற துறைகளின் மூலம் கேட்கப்படும் விவரங்களுக்கு தவறான விவரங்களை தெரிவிக்காமல் சரியான விவரங்களை மட்டும் தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் செயற்பொறியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. ”*

13.5 மேலும் ஒழுங்குமுறை ஆணையத்தின் பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(16) யை சுட்டிக்காட்டி 43(1) ம் பிரிவில் வரும் பிற இணங்குகைகள் என்பதற்கான வாசகம் தமிழ்நாட்டின் சட்டங்களில் கூறியுள்ளவாறு உரிய அதிகார அமைப்புகளிடமிருந்து அனுமதி அல்லது ஒப்பளிப்பு பெற வேண்டும் என்று கூறியுள்ளதையும் எடுத்துரைத்து மேற்கண்ட காரணங்களால் தடையில்லா சான்று அவசியம் என்று வாதிட்டார்.

13.6 மேல் முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் நதிகளுக்கு அருகில் உள்ள கிணறுகளுக்கு தடையில்லா சான்று அவசியம் என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். மேலும் அத்தடையில்லா சான்று பொதுப்பணித் துறையினால்தான் வழங்கப்படவேண்டும் என்பதில்தான் மேல்முறையீட்டாளருக்கும், எதிர்மனுதாரருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், சரபங்கா நதியின் அருகில் உள்ள கிணறுகளுக்கு தடையில்லா சான்று வேண்டுமா என்பதில் தான் இருவருக்கும் கருத்துவேறுபாடு உள்ளது.

13.7 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும், நதிகளுக்கு அருகில் உள்ள கிணறுகளுக்கு பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று அவசியம் என்பதை ஏற்றுக்

கொள்வதால், சரபங்கா நதி, ஆறு என்ற கருதப்படவேண்டுமா அல்லது Jungle Stream என்று கருதப்படவேண்டுமா என்பதை தீர்மானிக்க வேண்டியது உள்ளது.

**13.8** எனவே, இதுகுறித்த உரிமம்தாரரின் குறிப்பாணையிலுள்ள உத்தரவு என்ன என்பதை ஆராய வேண்டியுள்ளது. எனவே, மின்சார வாரியத்தின் உறுப்பினர் பகிர்மானம் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட குறிப்பாணை எண்.SE/IEMC/EE3/ AEE2/AE/D294/94(Tech Branch) dated **5.8.94** இல் குறிப்பிட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"However, the exact description for (a) the Canal / Channel / Water resources and (b) whether a particular River / Canal / Channeal / Water resource for which the extension of supply to agricultural pumpset is banned may be ascertained from the Executive Engineer / Public Works Department. Whereever the PWD authorities insist on clearance, the parties may be advised to obtain No Objection Certificate from PWD to proceed further for extension of supply."*

**13.9** மேற்கண்ட குறிப்பாணையினை கூர்ந்து ஆராய்ந்து பார்க்கும்போது ஒரு குறிப்பிட்ட ஆறு (*river*) /கால்வாய்(*canal*) /வாய்க்கால்(*channel*) /நீர் ஆதாரம் (water resource) ஆகியவற்றின் விவசாய பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்பு செய்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளதா என்பதை செயற்பொறியாளர்/பொதுப்பணித்துறையிடமிருந்து உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும், எங்கெல்லாம் பொதுப்பணித்துறை அலுவலகங்களால் அவர்களின் ஒப்புதல் பெறப்படவேண்டும் என்று கேட்கப்படுகிறதோ (*insist on clearance*) அந்த இடங்களில், மின்னிணைப்பு வழங்கிட சம்பந்தப்பட்டோர் பொதுப்பணித்துறையிடமிருந்து தடையில்லா சான்று பெற்றுத்தர வேண்டும் என்று தெரிகிறது. எனவே, மேற்கண்ட குறிப்பாணையின்படி பொதுப்பணித்துறைதான் ஒரு இடம் விவசாய மின்னிணைப்பு வழங்குவதற்கு தடை செய்யப்பட்ட இடமா என்பதையும் தடையில்லா சான்று வழங்கவும் அதிகாரம் உள்ளவர்கள் என்பது தெளிவாகிறது.

**13.10** மேலும், கண்காணிப்பு பொறியாளர்/ பொ.ப.து. நீ.ஆ.அ. அவர்களின் **11.5.12** நாளிட்ட கடிதத்தில் பத்தி கீழே கொடுக்கப்பட்டள்ளது .

*"தலைமைப் பொறியாளர் (பா) சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.பி2/1200/93 நாள் 7.10.94இன்படி ஆயக்காட்டு இல்லாத பகுதிகளில் வரும் கிணறுகளுக்கு ஆற்றிலிருந்து 200 மீட்டருக்கு மேல் இருந்தால் மட்டுமே தடையில்லா சான்று வழங்கலாம் எனவும் ஓடை, சிறிய ஓடை ஆகியவற்றிற்கு அருகில் கிணறுகளுக்கு மின்னிணைப்பு வழங்க தூாரம் கணக்கில் கொள்ளவேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது"*

13.11 மேற்கண்ட பத்தியினை கூர்ந்து படிக்கும்பொழுது ஆயக்கட்டு இல்லாத பகுயில் வரும் கிணறுகளுக்கு ஆற்றிலிருந்து 200 மீட்டருக்கு மேல் இருந்தால் மட்டும் தடையில்லா சான்று வழங்கலாம் என்று தெரிகிறது. மேலும், ஓடை, சிறிய ஓடைக்கு அருகில் உள்ள கிணறுகளுக்கு மின்ணைப்பு வழங்க தூாரம் எதுவும் கணக்கிடப்படவேண்டும் என்றும் அறியமுடிகிறது. அதாவது தடையில்லா சான்று ஆறுகளுக்கு அருகில் உள்ள கிணறுகளுக்குதான் தேவையே தவிர ஓடை, சிறு ஓடைகளுக்கு அருகில் உள்ள கிணறுகளுக்கு அல்ல.

13.12 சரபங்கா நதியில் மழை பெய்யும் பொழுது மட்டும் தான் தண்ணீர் வருகிறது. நதியில் தொடர்ந்து எதுவும் இல்லை. எனவே, அது ஆறு அல்ல காட்டாறு (*jungle stream*) என்று மேல்முறையீட்டாளர் வாதிட்டார்.

13.13 ஆனால், எதிர்மனுதாரர், இணையதளத்தில் சேலம் மாவட்டத்தில் உள்ள ஆறுகளில் சரபங்கா ஒன்றாக அதாவது காவேரி, வசிஷ்டா நதி, மற்றும் தவேதா நதிகளுடன் கூறப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். இணைதளத்தில் பாசனம் (*irrigation*) என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ளவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"

| ***IRRIGATION*** | | |
|---|---|---|
| | | *Year 2005 - 2006* |
| *1* | *Net Area irrigated by (Hect)* | |

| | | |
|---|---|---|
| | *a. Government Canals* | *795* |
| | *b. Prviate Canals* | *. . .* |
| | *c. Tanks* | *546* |
| | *d. Tube wells* | *9504* |
| | *e. Other wells* | *11521* |
| | *f. Other sources* | *. . .* |
| | *Total Net Area Irrigated* | *97973* |
| *2.* | *Gross Area irrigated (Hect)* | *119680* |
| *3.* | *Name of Rivers* | *Cauvery, Sarabanga Nathi, Vasista Nathi and Suvetha Nathi* |
| *4.* | *Name of Lakes* | *Govindavad, Eri, Ayyanar Koil Eri, Mookaneri Eri, Attur Pudu Eri, Umayalpuram Eri, Thedavoor Eri, Aragaloor Eri, Sendarapatty Eri, Naduvalur Eri, Sarvoy Periya Eri and Vadaman Eri* |

”

13.14 மேற்கண்ட ஆவணத்தின்படி சரபங்கா நதி என்று தான் கூறமுடிகிறது. எனவே, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்(ப)வின் 7.10.1994 என்று நாளிட்ட சுற்றறிக்கையின்படி தடையில்லா சான்று பெற வேண்டும் என்று தெரிகிறது.

13.15 கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து. நீ.ஆ.அ. அவர்கள் தடையில்லா சான்று வழங்குவது குறித்து தன்னுடைய 11.5.2012 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

“ *அரசு ஆணை எண்.1205/பொதுபது/நாள் 12.5.1964 மற்றும் அரசு கடித எண்.29267 / எஸ்3/பொதுபது/28.6.1985இன்படி தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி மேட்டூர் கால்வாயின் பிரதான வாய்க்காலில் இருந்து 50 மீட்டருக்குள்ளும் பகிர்வு வாய்க்காலிலிருந்து 25 மீட்டருக்குள்ளும் உள்ள பழைய கிணறுகளுக்கு அதாவது மேட்டூர் கால்வாய் வெட்டப்படுவதற்கு முன்பே வெட்டப்பட்ட கிணறுகளுக்கு மட்டும் மின்னிணைப்பு வழங்க தடையில்லாச் சான்று வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அரசு ஆணை எண்.3339/பொதுபது/நாள்12.12.1962இன்படி காவிரி ஆற்றின் கரையிலிருந்து 200 மீட்டருக்கும் மேட்டூர் கால்வாய் ஆயக்கட்டு பகுதியில் உள்ள பழைய கிணறுகளுக்கு (மேட்டூர் கால்வாய் வெட்டுவதற்கு முன்பு வெட்டப்பட்டுள்ள*

*கிணறுகளுக்கு) மின்னிணைப்பு வழங்க தடையில்லாச் சான்று வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தலைமைப் பொறியாளர்(பா) சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.பி2/1200/93/நாள்7.10.94இன்படி ஆயக்கட்டு இல்லாத பகுதிகளில் வரும் கிணறுகளுக்கு ஆற்றிலிருந்து 200 மீட்டருக்கு மேல் இருந்தால் மட்டுமே தடையில்லாச் சான்று வழங்கலாம் எனவும் ஓடை சிறிய ஓடை ஆகியவற்றிற்கு அருகில் உள்ள கிணறுகளுக்கு மின்னிணைப்பு வழங்க தூரம் ஏதும் கணக்கில் கொள்ள வேண்டியதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேற்கண்ட அரசாணை மற்றும் சுற்றறிக்கையின்படி தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி விவசாய கிணறுகளுக்கு மின்னிணைப்பு பெறுவதற்கு தேவையான தடையில்லாச் சான்று செயற்பொறியாளர்களால் வழங்கப்படவேண்டும்.*

*எனவே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டபடி அரசாணை மற்றும் சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி விவசாய கிணறுகளுக்கு மின்னிணைப்பு பெறுவதற்கு தேவையான தடையில்லா சான்று மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்படவேண்டும் என இவ்வட்டத்தைச் சார்ந்த செயற்பொறியாளர் பொ.ப.து, நீ.ஆ.அ சரபங்கா வடிநில கோட்டம், நாமக்கல் மற்றும் செயற்பொறியாளர் , பொ.ப.து நீ.ஆ.அ. மேட்டூர் அணைக்கோட்டம், மேட்டூர் அணை ஆகியவற்றிற்கு தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவும் பிற துறைகளின் மூல கேட்கப்படும் விவரங்களுக்கு தவறான விவரங்களை தெரிவிக்காமல் சரியான விவரங்களை மட்டும் தெரிவிக்கப்படவேண்டும் எனவும் செயற்பொறியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. ”*

13.16 மேற்கண்ட கடிதத்தினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது தடையில்லா சான்றுகள் வழங்குவதற்கு துறையின் சார்பில் வழங்கப்பட்ட அறிவுரைகள் தான் அந்த

கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. சரபங்கா நதியின் அருகில் உள்ள கிணறுகளுக்கு பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று அவசியமா அல்லது இல்லையா என்பது பற்றி தெளிவாக கூறப்படவில்லை.

13.17 மின் வாரிய உறுப்பினர் (பகிர்மானம்) அவர்களின் 5.8.1994 நாளிட்ட குறிப்பாணையின்படி எந்த ஆற்றின் அருகில் உள்ள விவசாய பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்க தடை செய்யப்பட்டுள்ளது என்பதை பொதுப் பணித்துறையிடமிருந்து தெரிந்து கொள்ளவேண்டும் என்றும் மின்னிணைப்பு வழங்க தடையில்லா சான்று எங்கெல்லாம் பெறவேண்டும் என்று பொதுப்பணித்துறை வலியுறுத்துகிறதோ அங்கெல்லாம் தடையில்லா சான்று பெறவேண்டும் என்று தெளிவு படுத்தியுள்ளதால் சரபங்கா நதியின் அருகிலுள்ள கிணறுகளுக்கு மின்னைப்பு வழங்க தடையில்லா சான்று வேண்டுமா அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டியது பொதுப்பணித்துறைதான் என்று தெளிவாக தெரிவதால், மேற்பார்வைப் பொறியாளர்/மேட்டூர் மின்பகிர்மானத்திட்டம் அவர்கள் பொதுப்பணித்துறையிடம் இதுகுறித்த தெளிவுரையை விரைவில் பெறவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது. ஆனால் தெளிவுரையை பெறப்படும்வரை சரபங்கா நதி , ஆறு என்று வலைதளத்தில் உள்ள அரசு தகவல்கள் மூலம் தெரிவதால் , தடையில்லா சான்று பெறப்படவேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

## 14. <u>வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு</u>

14.1 இந்த வழக்கில் இந்த மேல்முறையீட்டாளர் தடையில்லா சான்று பெறவேண்டும் என்றால், மின்சாரத்துறை செயற்பொறியாளரிடமிருந்து பொதுப்பணித்துறையை சார்ந்த செயற்பொறியாளருக்கு கடிதம் எழுதி தடையில்லா சான்று கேட்கப்பட்டால் பொதுப்பணித்துறை வழங்கும். எனவே, இந்த முறையீட்டில் உள்ள திரு. மு. இடும்பன்

அவர்களுக்கு தடையில்லா சான்று வேண்டும் என்று எதிர்மனுதாரர் கோரவேண்டும் என்று மேல்முறையிட்டாளர் வேண்டிக் கொண்டார்.

14.2 எதிர்மனுதாரர் சார்பில் கலந்துகொண்ட உதவிப் பொறியாளரும், செயற்பொறியாளரும்/இ–ப/மேட்டூர் அவர்களிடமிருந்து பொதுப்பணி துறைக்கு தடையில்லா சான்று கேட்டு கடிதம் எழுதுவதாக தெரிவித்தார்.

14.3 எதிர்மனுதாரர், கேட்புரை நாளில் கூறியதற்கு இணங்க, செயற்பொறியாளர்/நீர்வள ஆதார அமைப்பு / சரபங்கா வடிநில கோட்டம், நாமக்கல் அவர்களுக்கு திரு. இடும்பன் , /த/பெ முத்துசாமி கவுண்டர் மாரிகவுண்டன் காடு அவர்களது கிணறு சரபங்கா நதி அருகில் 200 மீட்டருக்குள் அமைந்துள்ளது என்றும், மேற்படி விண்ணப்பதாரர் கிணற்றிற்கு பொதுத்துறையிடமிருந்து தடையில்லா சான்று பெறவேண்டுமா அல்லது தடையில்லா சான்று பெறவேண்டும் என்பதில் ஏதேனும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா என்று 19.11.2012 நாளிட் கடிதத்தின் மூலம் கேட்கப்பட்டது என்றும் அதற்கு பதிலாக, செயற்பொறியாளர் /பொதுப்பணித்துறை /நீர்வள ஆதார அமைப்பு / சரபங்கா வடிநிலை கோட்டம், நாமக்கல் கீழ்கண்டவாறு தன்னுடைய 10.12.12 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளதாக கூறியுள்ளார்.

*"எனவே, இக்கோட்ட கட்டுப்பாட்டில் உள்ள எல்லைவரை உள்ள சரபங்கா நதி ஆற்றங்கரையிலிருந்து 200 மீட்டருக்கு மேல் உள்ள ஆழ்துளை கிணறுகள் மற்றும் கிணறுகளுக்கான புதிய விவசாய மின்னிணைப்பிற்கு பொதுப்பணித்துறையின் மூலம் தடையில்லா சான்று வழங்கப்படும் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது"*

14.4 மேலும், எதிர்மனுதாரர் மின்வாரியத்தின் மேட்டூர் கோட்டப்பகுதிகளில் சரபங்கா நதிக்கு 200 மீட்டருக்குள் , 104 விவசாய மின்னிணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அதில் நான்கு மின்னிணைப்புக்கு பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று பெறப்பட்டுள்ளது என்றும், மேலும் நான்கு விண்ணப்பங்களுக்கு பொதுப்பணித்துறையின்

தடையில்லா சான்று பெற்று தயார் நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், செயற்பொறியாளர்/பொதுப்பணித்துறை/ நீ.ஆ.அ/ வடிநிலக்கோட்டம், நாமக்கல் அவர்களால் வழங்கப்பட்ட ஏழு தடையில்லா சான்றுகளின் நகல்களையும் அனுப்பியுள்ளார்.

14.5 மேற்கண்ட தடையில்லா சான்றுகளை ஆராயும்பொழுது அவை எல்லாமே பயனீட்டாளரின் பெயரில், பயனீட்டாளரின் மனுவின் பேரில் தான் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது. மேல்முறையீட்டளார் கூறுவதுபோல், செயற்பொறியாளரின் பெயரில்தான் வழங்கப்படும் என்பது அல்ல மேலும், அந்த ஏழு சான்றிதழ்களில் இரண்டு தடையில்லா சான்றுகள் சரபங்கா நதிக்கரையில் உள்ள 200 மீட்டருக்குள் உள்ள கிணறுகளுக்கு வழங்கப்பட்ட சான்றுகள் ஆகும். அந்த இரண்டு சான்றிதழ்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | கடித எண். | பெறுநர் | கிணறு அமைந்துள்ள சர்வே எண். மோட்டார் மின் திறன் | கிணற்றிற்கும் சரபங்கா ஆற்றிற்கும் உள்ள தூரம் |
|---|---|---|---|---|
| 1. | களஎண்.78<br>பல/வ.அ/<br>கோ.314/2010<br>நாள் 28.1.2011 | திரு. இ. ஆறுமுகம்,<br>த/பெ இருசாக்கவுண்டர்<br>வெற்றிலைத்தோட்டம்<br>வி.என்.பாளையம் (அ)<br>எடப்பாடி, சேலம்<br>மாவட்டம் | வெள்ளநாயக்கன்பாளையம்<br>கிராமம், சர்வே எண்.129/1<br>6.17 ஏக்கர்<br>5. HP | 102 மீட்டர் |
| 2. | களஎண்.133<br>பல/வ.அ/<br>கோ.314/2010<br>நாள் 23.2.2011 | திரு. எம். சித்தையன்<br>த/பெ முனியன்<br>வெள்ளார் நாயக்கன்<br>பாளையம்,<br>பெரியப்பட்டறை,<br>எடப்பாடி வழி<br>சேலம் மாவட்டம் | ஆவணிப்பேரூர்<br>மேற்கு கிராமம்,<br>சர்வே எண்.131/2<br>6.72 ஏக்கர்<br>3. HP | 60 மீட்டர் |

14.6 மேல்முறையீட்டாளர், தன்னுடைய 26.12.2012 நாளிட்ட கடிதத்தில் செயற்பொறியாளர் /பொதுப்பணித்துறை/ஆதார அமைப்பு /சரபங்கா வடிநில கோட்டம், நாமக்கல் அவர்களின் 10.12.2012இல் தெரிவித்துள்ள சரபங்கா நதி ஆற்றங்கரையிலிருந்து

200 மீட்டருக்குள் மேல் உள்ள ஆழ்துளை கிணறுகள் மற்றும் கிணறுகளுக்கான புதிய விவசாய மின்னிணைப்பிற்கு பொதுப்பணித்துறையின் மூலம் தடையில்லாச் சான்று வழங்கப்படும் என்ற கருத்தை சுட்டிக்காட்டி திரு இடும்பன், த/பெ முத்துக்கவுண்டர், மாரிக்கவுண்டன் காடு அவர்களின் கிணறு சரபங்கா நதியின் ஆற்றங்கரையிலிருந்து 200 மீட்டருக்குள் வருவதால் தடையில்லா சான்று தேவையில்லை என்று வாதிட்டுள்ளார்.

14.7 மேற்கண்ட வழக்கெழு வினாவிற்கு விடைகாண நாம் செயற்பொறியாளர்/பொதுப்பணித்துறை / நீ.ஆ.அ/சரபங்கா /வடிநில கோட்டம், நாமக்கல் அவர்களின் 10.12.2012 நாளிட்ட கடிதத்தை ஆராய வேண்டும். அந்த கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கடிதத்திலுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"பார்வையில் கண்ட செயற்பொறியாளர் அவர்களின் கடித எண்ணில் கேட்கப்பட்ட மேற்கண்ட பொருள் சம்பந்தப்பட்ட அறிக்கை கீழ்க்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*தலைமைப் பொறியாளர் (பா) சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.பி2/1260/93 நாள்.7.10.94 ஆயக்கட்டு இல்லாத பகுதிகளில் வரும் கிணறுகளுக்கு ஆற்றிலிருந்து 200 மீட்டர் மேலிருந்தால் மட்டுமே தடையில்லாச் சான்று வழங்கலாம் எனவும் ஓடை, சிறிய ஓடை, ஆகியவற்றிற்கு அருகில் உள்ள கிணறுகளுக்கு மின்னிணைப்பு வழங்க தூரம் ஏதும் கணக்கில் கொள்ளவேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*எனவே, இக்கோட்ட கட்டுப்பாட்டில் உள்ள எல்லை வரை உள்ள சரபங்கா நதி ஆற்றங்கரையிலிருந்து 200 மீட்டருக்கு மேல் உள்ள ஆழ்துளை கிணறுகள் மற்றும் கிணறுகளுக்கான புதிய விவசாய மின்னிணைப்பிற்கு பொதுப்பணித்துறையின் மூலம் தடையில்லாச் சான்று வழங்கப்படும் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது"*

14.8 மேற்கண்ட கடிதத்தினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது என்னவென்றால், செயற்பொறியாளர்/பொபது/நீஆஅ/சரபங்கா வடிநில கோட்டம், நாமக்கல் கோட்ட கட்டுப்பாட்டில் உள்ள சரபங்கா நதி ஆற்றங்கரையிலிருந்து 200 மீட்டருக்கு மேல்உள்ள ஆழ்துறை கிணறுகள் மற்றும் கிணறுகளுக்கான புதிய விவசாய ஆழ்துளை கிணறுகள்

மற்றும் கிணறுகளுக்கான புதிய விவசாய மின்னிணைப்பிற்கு தடையில்லாச் சான்று வழங்கப்படும் என்று தெரிகிறது.

14.9 மேல்முறையீட்டாளர், தன்னுடைய 26.12.2012 நாளிட்ட கடிதத்தில், சரபங்கா நதிக்கரையில் 200 மீட்டருக்கு மேல் உள்ள கிணறுகளுக்குதான் தடையில்லா சான்று வேண்டும், ஆனால், திரு. இடும்பன், த/பெ முத்துக்கவுண்டர் அவர்களின் கிணறு சரபங்கா ஆற்றங்கரையோரம் <u>200 மீட்டருக்குள்</u> அமைந்துள்ளதால், தடையில்லா சான்று தேவையில்லை என்று வாதிட்டுள்ளார். அந்த வாதவுரை ஏற்புடையதாக இல்லை. ஆற்றங்கரையிலிருந்து 200 மீட்டருக்கு மேல் உள்ள கிணறுகளுக்கு பொதுப்பணித்துறை தடையில்லா சான்று வழங்கும் என்பதினால் 200 மீட்டருக்குள் அமைந்துள்ள கிணறுகளுக்கு தடையில்லா சன்று இல்லாமலே விவசாய மின்னிணைப்பு வழங்கலாம் என்று எடுத்துக் கொள்ள முடியாது.

14.10 மேலும், எதிர்மனுதாரர் அனுப்பியுள்ள தடையில்லா சான்றுகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது 200 மீட்டருக்குள் அமைந்துள்ள இரண்டு கிணறுகளுக்கு செயற்பொறியாளர்/பொதுப்பணித்துறை/நீ.ஆ.அ/சரபங்கா வடிநிலகோட்டம், நாமக்கல் அவர்கள் கடந்த 2011ஆம் ஆண்டில் தடையில்லா சான்று வழங்கியுள்ளது தெரிகிறது. எனவே, மேல்முறையீட்டாளரின் வாதமான சரபங்கா ஆற்றிலிருந்து 200 மீட்டருக்குள் உள்ள கிணறுகளுக்கு தடையில்லா சான்று தேவையில்லை என்பதை என்னால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.

14.11 மேற்பார்வை பொறியாளர் /மேட்டூர் மின்பகிர்மானத் திட்டம் அவர்கள் தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(16)க்கு பின்பு கொடுக்கப்பட்டுள்ள(explanation) விளக்கத்தினை சுட்டிக்காட்டியிருப்பதினால் அந்த விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"**விளக்கம்** : ஐயங்களை அகற்றும் பொருட்டு, மேலேயுள்ள **(1)**ஆம் உள் ஒழுங்குமுறைவிதியில் மறுபடியும் ஆக்கப்பட்டவாறு சட்டத்தின் **43(1)**ஆம்*

*பிரிவிற்குரிய விளக்கத்தில் வரும் "பிற இணங்குகைகள்'' என்ற வாசகம், பின்வருவதை உள்ளடக்குதல் வேண்டும், அதாவது : –*

*(a) ஆர்வமுள்ள நுகர்வோரால் மின் வழங்கல் கோரப்படும் கட்டுமானம், மாற்றியமைத்தல் அல்லது கட்டிடங்கள் பழுதுபார்த்தல் அல்லது புதிய தொழிற்சாலைகள் அல்லது தொழிற்கூடங்கள் அல்லது பிற நிறுவனங்களை நிறுவுதல் குறித்து தமிழ் நாடு மாநிலத்தின் சட்டங்களில் சொல்லப்பட்டவாறு உரிய அதிகார அமைப்புகளிடமிருந்து அனுமதி அல்லது ஒப்புதலளிப்பு அல்லது ஒப்பளிப்பு அல்லது இசைவு பெறுவது தொடர்பாக அத்தகைய சட்டங்களுக்கு ஆர்வமுள்ள நுகர்வோர் இணங்கி நடத்தல் ; ''*

*(b) மேலேயுள்ள **(4), (11)**ஆம் மற்றும் **(12)**ஆம் உள்ஒழு ங்குமுறைவிதிகளில் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு ஆர்வமுள்ள நுகர்வோர் இணங்கி நடத்தல் ;*

*(c) உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பாணை, அல்லது ஆணை அல்லது தீர்ப்பு எதிலும் சொல்லப்பட்டுள்ள மின் வழங்கல் அல்லது பிறகோரிக்கைகள் பொறுத்து அத்தகைய தீர்ப்பாணை, அல்லது தீர்ப்பிற்கு ஆர்வமுள்ள நுகர்வோர் இணங்கி நடத்தல்.''*

**14.12** மேற்கண்ட விளக்கத்தில் பத்தி **(*a*)**இன்படி மின்னிணைப்பு பெற விரும்புவோர், தமிழ்நாடு மாநிலத்தின் சட்டங்களில் சொல்லப்பட்டவாறு உரிய அதிகார அமைப்புகளிடமிருந்து அனுமதி அல்லது ஒப்புதலளிப்பு அல்லது ஒப்பளிப்பு அல்லது இசைவு பெறுவது தொடர்பாக அத்தகைய சட்டங்களுக்கு இணங்கி நடக்க என்று உள்ளது என்றும் எனவே, பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று அவசியம் என்று வாதிட்டுள்ளார்.

**14.13** எனவே, இந்த மேல்முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள திரு. இடும்பன் த/பெ. முத்துசாமி கவுண்டர் அவர்களுக்கு பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று இல்லாமல் விவசாய மின்னிணைப்பு வழங்குவதற்கு வாய்ப்பு இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

15. <u>முடிவுரை :</u>

15.1 மேற்கண்ட பத்தி எண்.14இல் உள்ள தீர்வின்படி, மேட்டூர் மின்பகிர்மான திட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்புரையில் தலையீடு செய்யமுடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

15.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண். 42 / 2012 இறுதி முடிவு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1. திரு.சேலம் மாவட்ட உபயோகிப்பாளர் உரிமைக் கழகம்,
எண்.51, எடப்பாடி சாலை,
தேவூர் – 637 104,
சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம்.

2. மேற்பார்வைப் பொறியாளர்
மேட்டூர் மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
மேட்டூர் அணை – 1.

3. தலைவர்
தமிழ்நாடு மின்பகிர்மான கழகம்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி வளாகம்
அண்ணாசாலை
சென்னை – 2.

4. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19எ, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

5. உதவி இயக்குநர் (கணினி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19எ, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.